Registered at the G. P. O. as a Newspaper ★ விலை சதம் 15

# ஈழநாடு

[illegible] National Tamil Daily

மலர் 7 விசுவாவசு வைகாசி 17 முஹர்ரம் பிறை 28 (30-5-65) ஞாயிற்றுக்கிழமை இதழ் 108

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

"தமிழ்ப் பகுதிகளில்

## நீர், மின்சார விநியோகம் சீர்படுத்தப்படும்"

—ஸ்தல ஸ்தாபன மந்திரி

கல்முனை, சனி

"'கிழக்கு மாகாணத்திலே தேனும், பாலும் பாயும் என்று கூறுவர். ஆனால் நான் நேரடியாக பார்க்கும்சமயம் அவ்வெண்ணத்திற்கு எதிர் மாறுயுள்ளது. இங்குள்ள கிராம மக்கள் தங்கள் பாவனைக்குத் தேவையான தண்ணீர் கிடைக்காமல் அவதிப் படுவதை நேரில் காண்கின்றேன்'' என்று ஸ்தலஸ்தாபன அமைச்சர் கல்முனைத் தொகுதியிலுள்ள நற்பிட்டிமுனை என்னும் கிராமத்தில் தமக்கும் இதர தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:''வடக்கு,கிழக்குமாகாணங்களிலுள்ள கிராமங்கட்குச்சென்று அங்குள்ள நிலையை அறிந்துவருகின்றேன். எமது தேசிய அரசாங்கம் தண்ணீர் விநியோகத்திற்கு, சிம்மாசனப்பிரசங்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. தமிழ் பிரதேசங்களில் மட்டுமின்றி, சிங்களப் பிரதேசங்களிலும் தண்ணீர் விநியோகத்தை விருத்தி செய்யத்திட்டமிட்டுள்ளேன். அதுமட்டுமின்றி மின்சார விநியோகமும் பெற்றுத்தருவேன் என திடமாகக் கூறுகின்றேன்.

வடக்கு,கிழக்குமாகாணத்தில், வாலிபர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைபோக்குவதற்குநாம் வழிவகைகளைக்கையாளமுற்பட்டிருக்கின்றோம். தேசிய அரசாங்கத்தின்மூலம் நமது பிரச்னைகளைத் தீர்க்கலாம் என்பது எனது திடமான நம்பிக்கை.''

பட்டிருப்பு பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம், மட்டுநகர் பிரதிநிதி திரு. செ. இராசதுரை ஆகியோரும் பேசினர்.

## கீரிமலையில் தீர்த்த உற்சவம்

மாவிட்டபுரம், சனி

மாவிட்டபுரம். ஸ்ரீ கந்தசுவாமி கோவிலிலிருந்து முருகப்பெருமான் ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலைக்கு தீர்த்தமாட எழுந்தருளுவார். ஞாயிற்றுக்கிழமை நிகழும் பூரண சூரியகிரகணத்தை முன்னிட்டேஇந்த விசேஷ தீர்த்த உற்சவம் நடத்தப்படுகிறது.

## வர்த்தமானி விளம்பரத்தில் பாரபட்சமா?


### அறிவித்தல்களை மும்மொழிகளிலும் வெளியிடுமாறு மந்திரிக்கு எம். பி. தந்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

**வேலைவாய்ப்பு சம்பந்தமாக அரசாங்க வர்த்தமானி ("கஸட்") அறிவித்தல்களில் காட்டப்படும் பாரபட்சத்தைக் கண்டித்து ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு தந்தியொன்று அனுப்பிவைத்துள்ளார்.**

அரசாங்க வர்த்தமானியில் வெளியாகும் பல முக்கியமான வேலை வாய்ப்பு விளம்பரங்கள் சிங்களத்தில் மட்டுமே வருகின்றன என்பதைச் சுட்டிக் காட்டிய திரு. நவரத்தினம், இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு தமது தந்தியில் கோரியுள்ளார்.

''கடந்த 21-ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் கலைப்பகுதி (''ஆர்ட்'') ஆசிரியர்கள் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வெளியாகியிருந்தது. ஆனல் இவை சிங்களத்தல் மட்டுமே இருந்தது. விண்ணப்பதாரர்கள் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் தகுதிபெற்றிருக்கவேண்டுமென்று அந்த விளம்பரத்தில் கோரப்பட்டிருந்தும் அந்த அறிவித்தல் சிங்களத்தில் மட்டுமே வெளியாகியிருப்பதுவேதனை அளிப்பதாக இருக்கின்றது. தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் இப்படியான பல விளம்பரங்கள் சிங்களத்தில் மட்டும் வெளியாவதன் மூலம் தமிழ்ப்பேசும் மக்கள் மீது பாரபட்சம் காட்டப்படுகின்றது. அரசாங்க வர்த்தமானியில் வெளியாகும் சகல விளம்பரங்களையும் சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்குமாறு கோருகின்றேன். இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்'' என்று திரு.வி. நவரத்தினம் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

சுரங்க விபத்து:

# 250 பேர் பலி

## இந்தியாவில் சம்பவித்த மிக மோசமான விபத்து

கல்கத்தா, மே 29

**வட இந்தியாவில் பீஹார் ராஜ்யத்தில் டூரிகலீரி எனுமிடத்தில் நேற்றுஅதிகாலை ஏற்பட்ட நிலக்கரி சுரங்கவெடி விபத்தில் சுமார் 300 பேர் மாண்டனர்இந்தியாவில் இப்படியான சுரங்க விபத்து ஏற்பட்டது இதுவே முதற்தடவையாகும்.**

இந்த விபத்தினுல் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்து ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் சாஸ்திரி, தொழில் மந்திரி, மற்றும் காபினட் மந்திரிகள்செய்திகள் அனுப்பியுள்ளனர். பிரதமர் தமது உதவி நிதியிலிருந்து 40,000 ரூபாவை ஒதுக்கியுள்ளார். நிலக்கரிச் சுரங்கத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பமொன்றுக்குஉடனடியாக 200 ரூபாய் வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சடலங்களை மீட்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த சுரங்க விபத்தினுல் இரண்டரை சதுர மைல் பரப்பு பாதிக்கப் பட்டிருக்கின்றது. வெடி விபத்தின் போது பாறையொன்று மூன்று மைல் தூரம் வரை பறந்து சென்று நித்திரை செய்துகொண்டிருந்த ஒரு தொழிலாளி மீது விழுந்ததினுல் அவர் ஸ்தலத்திலேயே மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெடி விபத்தில் 250 பேர் மாண்டனர் என்று உத்தியோக பூர்வமான செய்தியொன்று கூறுகின்றது. சடலங்களை மீட்டபின்னரே மாண்டவர் தொகை தெரியும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## "காந்தி, நேரு போன்றவர்"

### மார்ட்டின் லூதருக்கு புகழ்மாலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

''மார்ட்டின் லூதர்கிங், அமெரிக்க நீக்ரோ மக்களின் காந்தி. மறைந்த நேருவைப்போல, தமது மக்களின் விதியை நிர்ணயிக்கக் கூடிய சக்தி படைத்தவர்'' என்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்க-இலங்கை கலாச்சார நிலையத்தில் ''மார்ட்டின்லூதர்கிங்'' பற்றி யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த திரு. ராஜன் கதிர்காமர் பேசுகையில் கூறினர்.

இன விடுதலைக்காகப் போராடிவரும் திரு.மார்ட்டின் லூதர்கிங் தமது இளம் வயதிலே நோபல் சமாதானப் பரிசைப் பெற்றதன் மூலம் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்றவர்களின் வரிசைக்கு வந்துவிட்டார்'' என்றும் அவர் கூறினர்.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த திரு. எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில், சட்டத்தின் முன்பும் கடவுளின் முன்பும் சகலரும் சமமானவர்களே என்ற ஆபிரகாம் லிங்கனின் கனவை காலம் சென்ற ஜனதிபதி கென்னடியும் ஜனதிபதி ஜோன்ஸனும் நனவாக்கிவிட்டார்கள் என்றும் சிவில் உரிமை மசோதா சட்டமானதன் மூலம் அமெரிக்கர்களின் தரம்உயர்ந்து விட்டது என்றும் கூறினர்.

## "புதுயுகமாக மாற்றியவர் நேரு"

நல்லூர், சனி

''இந்த நூற்றாண்டைச் சரித்திரத்திலேயே நேருஜியின் வாழ்க்கை புதுயுகமாக மாற்றிவிட்டது. ஜனநாயகம், சமதர்மம், மத சார்பற்ற அரசாங்கம் என்னும் கொள்கைகளை அவர் கைக்கொண்டொழுகினர்'' என்று இலங்கைப் பல்கலைக் கழக முன்னுள் கல்வி விரிவுரையாளர் திரு. கே. நேசையா யாழ்மறுமலர்ச்சி மன்ற விழாவிற் பேசும் போது குறிப்பிட்டார்.

யாழ் மறுமலர்ச்சி மன்ற ஆதரவில் திருநெல்வேலி கலாமன்றத்தில் திரு. பி. [illegible] நேருஜி நினைவு விழாக் கொண்டாடப்பட்டது. பேராசிரியர் கே. நேசையா தொடர்ந்துபேசுகையில், நேருஜியின் வாழ்க்கை உலக சமாதானத்திற்கு பயன்படுவதாக இருந்ததென்றும் தம் வாழ்நாள் முழுவதிலும் உலகநலனுக்கான முயற்சிகளிலேதான் ஈடுபட்டார் எனவும் குறிப்பிட்டார்.

## கிழக்கு பாகிஸ்தானில் ரயில்வேஊழியர் வேலைநிறுத்தம்

### பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்: ஒருவர் பலி; 6 பேர் காயம்

டாக்கா, மே 29

கிழக்கு பாகிஸ்தானில் ரயில்வே ஊழியர்கள் பெருமளவில் வேலை நிறுத்தம் செய்து வருவதால் ரயில் போக்குவரத்து முற்ருக ஸ்தம்பித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

வேலை நிறுத்த ஊழியர்கள் மீது அடக்குமுறை ஏவி விடப்படுவதாயும், நேற்று முன்தினம் நான்கு முறை பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

டாக்காவிலிருந்து சில ரயில்கள் மட்டும் பலத்த ராணுவ பந்தோபஸ்துடன் விடப்படுவதாயும், அதுவும் பலமணிநேர தாமதத்திலேயே நடைபெறுவதாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

கூட்டங்கள், ஊர்வலங்கள் முதலியன தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

ஜனதிபதி அயூப்கான், வெளிநாட்டுமந்திரிபூட்டோ சகிதம் இன்று டாக்கா வந்தார்.

ரயில்வே ஊழியர்கள் 11 கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்துவருகிறார்கள். அதிகச் சம்பளம், நியாயமான விலைக்கு அரசாங்க விற்பனைக் கடைகள் ஆகியனவேண்டும் என்பது கோரிக்கைகளில் சில.

நேற்று வேலை நிறுத்தம் செய்தவர்கள்மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானுர். ஆறுபேர் காயமடைந்தனர்.

## இன்று

''ஆறு கிரகங்கள் ஒன்று சேர்வதால் உலகுக்கு நிகழக் கூடிய தீமைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு காரைநகர்-வியாவில் ஐயனர் கோவிலில் பகல் 11 மணிக்கு நவோத்தருசகஸ்ர சங்காபிஷேகமும், விசேஷ பூசையும் இரவு தண்டிகை உற்சவமும், மகேஸ்வர பூசையும் மேளக்கச்சேரிகளுடன் நடனமும் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பலாம் நடந்தது

### அறுபது ஆண்டுகளாக நித்திரையில்லை—?

அறுபது ஆண்டுகளாகக் கண் மூடி நித்திரை செய்யாத வலென்ரின் மெடினு என்னும் 68 வயது நிரம்பிய ஒருவர் ஸ்பானிய தேசத்தில் வசித்து வருகின்றார். உலகின் பல பாகங்களிலிருந்து குறிப்பிட்ட மெடினுவைப் பரிசோதித்த டாக்டர்கள் அன்னாருக்குத் ‘தூக்கமின்மைநோய்’ என்று கூறியிருக்கின்றார்கள்.

மெடினு சிறிதேனுங் கவலைப்படாதுகாணப்படுகின்றார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய மக்களை விடத்தாம் அதிக காலம் வாழ்ந்து விட்டதாக அவர் கூறியுள்ளார்; ஏனெனில் மெடினு சிறுவனுயிருந்தகாலம் முதலே தூக்கமின்றி வாழ்ந்து வந்தாராம்.

அடுத்த மனிதர்கள் தூங்கும் வேளை - அவர் சொல்கிறார்- ‘‘நான் என் வாழ்நாளில் ஒவ்வொரு நிமிஷமும் வாழ்ந்துவந்திருக்கிறேன். ஒவ்வொரு மனிதனும் தினந்தினம் எட்டு மணித்யாலங்கள் நித்திரைசெய்திருப்பின், நான்அவர்களை விட7,300 நாட்கள் அதிகமாக வாழ்ந்திருக்கின்றேன். அது என்னுடைய உண்மையான வயதிலும் 20 ஆண்டுகள் அதிகமாகக் கணிக்கப்பட்டுள்ளது’’

வலென்ரின் மெடினுவைப் பரிசோதித்த டாக்டர்கள் தூக்கமாத்திரைகளைக் கொடுத்தும், மருந்தூசிகள் ஏற்றியும் முயற்சித்தனர். ஆனால் அவர் இன்னும் துயில மறுக்கின்றார். இரவும் பகலுமாக முழு நாட்கள் பரிசோதித்த வைத்திய வல்லுநர்கள் மெடினுவிடம் குடிகொண்ட மர்மத்தை அறியாது திகைத்தனராம். பலவித வைத்தியப்பரிசோதனைகள் மூலம் மெடினு மிகவும் தைரியசாலி எனக்கூறப்பட்டது. 70 ஆண்டுநிரம்பும் வேளையில் அவரிடம் காணப்படும் [illegible]ரேயொரு குறை அ[illegible]ப்பொழுது தலை[illegible]ர் [illegible]ஆட்டும் நிலையி[illegible]ன்[illegible]ர் என்பது தா[illegible].

‘‘வைத்திய[illegible] உலகமே எனது உடம்பில் ரஸனை கொண்[illegible]ள்ளது.

‘‘வை[illegible]யர்கள் பல கொடைகள் [illegible]ந்துள்ளனர், நான் [illegible]றந்த பின்பு எ[illegible]து உடம்பை ஸ்பானிய வைத்[illegible]யப் பகுதி ஒன்[illegible]க்கு அளிப்பதாக உறுதி பூண்டுள்ளேன்’’

இவ்வாறு மெடினோ கூறியுள்ளார்.

சில நாட்களுக்கு முன்பு பத்திரிகை நிரு[illegible]ர்கள் இருவர் எட்டு மணித்தியாலம், எட்டு மணித்தியாலமாக மெடினுவை மாறி மாறிக் கண்காணித்து வந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி எதுவித செய்தியுங் கிட்டவில்லை, பிரம்மச்சாரியான வலென்ரின் மெடினு ஒரு சாதாரண கமக்காரராவர். அவர் பெரிய வயற்காணி ஒன்றில் வேலைபார்த்து வருகின்றார், உழுதல், பயிரிடுதல், பயிர் சேர்த்தல் முதலியதொழில் முறைகளே அவரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரவு வேளைகளில் பசு, செம்மறியாடு போன்ற மந்தைக்கூட்டங்களுக்குக் காவற்காரராகவும், மெடினு இருக்கின்றார் என அறியப்படுகிறது.

மெடினுவின் அறைக்குள் அவர் படுப்பதற்கான படுக்கை எதுவுமில்லை. கட்டில் இடத்தைப் பிடிக்கிறதென்று அதனை நீக்கும்படி செய்துவிட்டார். தமக்குக் களைப்பு ஏற்படும் வேளைகளில் கடினமான நிலத்தில் சிறிது சாய்ந்துவிடுகிறார். மெதுமையான கட்டில் மெடினுவினுடைய ஒவ்வொரு எலும்புக்கும் வலியைக் கொடுப்பதாக அவர் கூறிக்கொள்கிறாராம்.

மெடினு நிறையச்சாப்பிடுபவர். அவரைப் போல் யாரும் உண்ணமாட்டார்கள் எனவும் கூறப்படுகிறது.

‘‘என்னைவிட, என்னிடம் வருபவர்களில் அதிகமானோர் என்னைப்பற்றிக் கவலைப்படுகின்றனர். என்னைத்தூங்கவைப்பதற்காகஅறிமுகமில்லாத குடிவகைகளையெல்லாம் என்[illegible]டம் எடுத்துவருகிறார்கள். சிலர் சாராயத்தைக் குடி[illegible]கும்படிஎன்னை வற்பு[illegible]துகின்றனர். நான் [illegible]வையெல்லாவற்றையுமே மறுக்கின்றேன். நான் எதற்காக நித்திரை கொள்ளவேண்டும்?’’

பத்திரிகையாளருக்கு அளித்தபேட்டியில் மேற்கண்டவாறு மெடினு கூறினாராம்.

வலென்ரின் மெடினு தமது வாழ்நாள் முழுவதும் கண்மூடி நித்திரை செய்யாமலே காலத்தைக் கழிக்கப்போகிறார்.

—[illegible]

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி ?

தெல்லியூர் எழுதுகிறார்

[விசுவாவசு ஹூ வைகாசிமீ 17 ஞாயிறு முதல் 23 சனி வரை 30-5-1965 — முதல் 5-6-1965 வரை ]

### மேட இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சுபபலன்களிலும் பார்க்க கஷ்டபலன்கள் சற்றுக் கூடுதலாக காணப்படும். எதிரிகளாலும் போட்டியாளராலும் இவ்வாரம் கஷ்டங்கள் நேர இடமுண்டு. பணநட்டம், தேகாரோக்கியக் குறைவு காணப்படினும் குடும்பத்திலும் வெளி இனபந்துக்களிடையேயும் சுமுகமான நிலைமை நிலவ இடமுண்டு. பணநிலைமை சற்று கஷ்டமுள்ளதாக இருக்கும். உத்தியோகத்தி லுள்ளவர்களுக்கு தொழிலிடத்தில் எச்சரிக்கையாகவும் பொறுமையாகவும் நடப்பது அவசியமாகும். வர்த்தகத் துறையில் அபிவிருத்தி காணப்படும். கமத்தொழில் விருத்தி, கல்வித் துறைச்சிறப்பும்உண்டு. பெண்களுக்கு பலதுறையிலும் சிறப்புண்டு. சுபதினங்களாக ஜூன் 2, 3-ந் தேதிகள் இருக்கும்.

### இடப இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் அசுபபலன்களே அதிகமுள. நண்பர்-உறவினருடன் சண்டைசச்சரவுகள், பலவிதமாகவும் மனச் சஞ்சலம் ஏற்படல், பொருள் நட்டம், தேகாரோக்கியக் கேடு. இனபந்துக்களால் இடர் விளைதல், ஆதியன காணப்படும். மலச்சிக்கல், அஜீரணம் காரணமாக உடல் நலம் பாதிக்கப்படும். குடும்பத்தில் குழந்தைகளால் கவலையுண்டு-சிறுசிறு சச்சரவுகளும் காணப்படும். முயற்சிப்பின்னடைவு-கமத்தொழில், வர்த்தகத்தில்வீழ்ச்சி, ஆதாயக் குறைவு-உத்தியோகத்தில் மேலதிகாரிகளால்இடர் விழைதல், பெண்களுக்கு குடும்பசுகம். செல்வாக்கு விருத்தி, பொருட்சேர்க்கை ஆதியனகாணப்படுகின்றன. ஜூன் 2, 3-ந் தேதிகள் சுப தினங்களாகும்.

### மிதுன இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கல்விச்சிறப்பு, சுபகருமங்கள் குடும்பத்தில் நடத்தல் ஆதியன இருப்பினும் எதிரிகளால் இடர்கள் பெருகுதல், பொருள்நட்டம், இனபந்துக்களால் சச்சரவுகள், அவமானச்சொற் கேட்டல், மேலதிகாரிகளிடம் குறைகேட்டல், தேகநலக் குறைவு, நண்பர்-இனபந்துக்கள் அபிப்பிராயபேதம், சண்டை சச்சரவு ஆதியனவே மிகுத்துக் காணப்படும். பணநிலைமை ஓரளவு மத்திமமாக இருக்கும். கமத்தொழில், வர்த்தகம், உத்தியோகத்துறை ஆதியனவும் மத்திமபலன்களையேதரும். பெண்களுக்கு சுபகருமங்கள் நடத்தல், பொருள்வரவு, களத்திர சுகம், தாயாகும் பேறடைதல் ஆதியன காணப்படுகின்றன. ஜூன் 2, 3-ந் தேதிகள் நலமுள்ள நாட்களாகும்.

### கடக இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் இருவித பலன்களும் கலந்து நடக்கும். தேகநலக் குறைவுகள், பொருள் நட்டம், எதிரிகளால் கஷ்டம். இனபந்துக்கள் - நண்பர்களிடையே அபிப்பிராயபேதம், குடும்ப சச்சரவுகள், முயற்சிகளில் பொருள்வரவு, கல்வித் திறமை பிரகாசித்தல், கமத்தொழில் வரவு, முன்னையிலும் பார்க்க கூடிய அளவு உத்தியோகத் துறையில் உயர்வு, வர்த்தகத்துறையில் வீழ்ச்சியும் நட்டமும் காணப்படும். பெண்களுக்கு இவ்வாரத்தில் பணநிலைமையில் திருப்தியான நிலைமை, துக்கசெய்தியால் மனச்சஞ்சலம், சமூகசூழலில் ஒதுங்கியிருப்பதால் நன்மை ஆதியன உண்டு. ஜூன் 2, 3-ந் தேதிகள் சுபநாட்களாகும்.

### சிங்க இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கஷ்டபலன்களே மிகுத்துக் காணப்பட இடமுண்டு. நண்பர்-இனபந்துக்களிடை பகைமை, தேகநலக்குறைவு, முயற்சிகளில் பின்னடைவு, எதிரிகளால் இடையூறுகள் ஏற்படல், அதிக செலவு, கஷ்டபிரயாணம், கவலையீனத்தால் பணநட்டம், வர்த்தகத்தில் அபி

(10-ம் பக்கம் பார்க்க)


### விளம்பரம்

இறைமதிப்பு வரி அறவிடுபவர் பதவிகளுக்கு சுழிபுரம் கிராமசபைத் தலைவரால் 10-6-65 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிப்பவர் 18 வயதுக்குமேற்பட்டவராயும் தமிழில் அழகாக எழுதக்கூடியவராயும் இருக்கவேண்டும். தெரிவு செய்யப்பட்டபின் ரொக்கப்பிணையாக ரூபா 250 செலுத்தவேண்டும். அறவிடப்பட்ட வரித் தொகைக்கு 12 வீதம் தரகு வழங்கப்படும்.

சு. கந்தசுவாமி,
தலைவர்,
சுழிபுரம் கிராமசபை.
கி. ச. காரியாலயம்,
சுழிபுரம்,
27-5-65. 184

### விளம்பரம்

கரைச்சிக் கிராமசபை நிர்வாகத்தின் கீழுள்ள இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் அவுடதப் பரிசாரகர் சக லிகிதர் என்னும் பதவிக்கு கரைச்சிப்பகுதியில் நிரந்தர வாசம் செய்பவராயும் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை (கணித பாடத்தில் திறமை Credit) சித்தியடைந்தவராயும், விண்ணப்ப முடிவு திகதியில் 25 வயது நிரம்பியவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயுமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்வரும் 1965-ம் ஆண்டு ஆனி மாதம் 10-ம் திகதி முற்பகல் 10 மணிவரையிலும்ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பு:- இக்கிராமசபை பிரதேச நிரந்தரவாசி என்பது அவ்வப்பகுதி கிராம சேவையாளர்களால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

வீ. ஆனந்தசங்கரி,
அக்கிராசனர்,
கரைச்சிக்கிராம சபை.
கிளிநொச்சி,
27-5-1965. 185

### காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி சோமசுந்தரம்லேனில்உள்ளமூன்றரைப் பரப்புக் காணியும் புதுக்கக் கட்டிய வீடும் விற்பனைக்கிருக்கிறது. விரும்பினால் 2 பரப்பும் வீடும் பிரித்து விற்கப்படும். விசாரணை திரு. எஸ். ஏ. ஜேம்ஸ், No. 52 A, ரெம்பிள்றோட், ரெயில்வே கடவை, சுண்டிக்குளி. 306


### காந்தியுடன் கலந்த ஜோதி

வீரச்செயல் போற்றினரே எங்கள் நேரு
வெற்றி யெமக் கென்றாரே எங்கள் நேரு
ஆரமானார் அகிலத்திற்கே எங்கள் நேரு
அண்ணல் காந்தி யோடிணைந்தார் எங்கள் நேரு

— உ. இ. தமிழ்ச்செல்வன்

மண்ணவர் போற்ற அன்பால்
மாநிலம் காத்த மன்னன்
எண்ணரும் இதயத் துள்ளே
இணைந்தனன் இறைவ னாக
முன்னரும் சுதந்தி ரப்போர்
முனைந்தஎம் காந்தி யோடு
அண்ணலெம் பண்டிட் நேரு
அடைந்தநாள் நினைவு கூர்வோம்.

— வே ஐயாத்துரை


## வரி விளம்பரம்

### கல்வி

பி. ஏ., ஜி. ஏ. கியு. ஜி. சி. ஈ. (உயர், சாதாரண) தரங்கள், கலை; விஞ்ஞானம்; தமிழ், ஆங்கில வர்த்தக வகுப்புக்கள்; சிங்களம்; மத்திய எழுதுவினைஞர் வகுப்பு; அப்போதிக்கரி புகுமுக வகுப்பு; ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யாழ். டியூட்டோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 328

### EDUCATIONAL

Join Immediately Classes in full swing G C E Ordinary Level-Commerce UNITED INSTITUTES, NELLIADY, KARAVEDDI 107, Point-Pedro Road, Nallur Jaffna 320

### விஞ்ஞான வகுப்புக்கள்

க. பொ. த. சாதாரணப் பரீட்சைக்கு வகுப்புக்கள் நடாத்தப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன், வர்த்தக கல்வி நிலையம், திருநெல்வேலி, 317

### விற்பனைக்கு

பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோர், இ. போ. ச. டிப்போ, கந்தசுவாமி கோவில் ஆகியவற்றிற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடும், காணியும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு C/o இலட்சுமி பதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 312

வீட்டுக்குரியமரங்கள்-திறமானதும் துப்புரவாக வெட்டினதுமான பனைமரங்கள் 4 முழம் தொடக்கம் 14 முழம் வரை, சலாகைகள்: 4 முழம் தொடக்கம் 12 முழம்வரை, பாலைமரம்: 18 அடி நீளம் 6×4, 18 அடி நீளம் 4×3 குறைந்த அளவுகளிலும் பெறலாம். சகாய விலை. கிடைக்குமிடம் பத்திமா முறிவு, நெரிவு வைத்திய சாலை, ஊர்காவற்றுறை. 318

### தேவை

நெசவு வேலை நன்கு தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. போடிங் வசதி உண்டு. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு: அன்னம்ஸ் சாறி வேக்ஸ், 27, மின்சாரநிலைய வீதி, விக்னேஸ்வரா மேல் மாடி, யாழ்ப்பாணம். அல்லது அன்னம்ஸ் சாறி இன்டஸ்றீஸ், கோயில் வீதி, கொக்குவில். 330

### வாடகைக்கு

கிளிநொச்சி பஸாரில், கண்டிறோட் 158-ம் கட்டையில் ‘‘மீரா பில்டிங்ஸ்’’ என்ற இரு கடைகள் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: சிந்தாமணி சொக்கநாதன், மல்லாகம். 335

### தையல்

பெண்களினதும் சிறுபிள்ளைகளினதும், விசேஷமாக முதற் தேவ நற்கருணைபெறுவோரதும் உடுப்புகள், துப்பட்டிகள் குறைந்த கூலியில் குறிக்கப்பட்ட தவணையில் செய்து கொடுக்கப்படும். 156, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 339

**தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடவுள் பெயரால் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வேள்விப்பலி

மாவிட்டபுரம் பெயர் பெற்ற புனிதஸ்தலம். அந்த ஸ்தலத்தைப் பற்றி பல பல கதைகள் உண்டு. கீரிமலையும் மாவிட்டபுரமும் புனித இடங்களாகப் பிரகடனப் படுத்த வேண்டுமென்றும் சிலர் கோரிக்கை விடுத்ததுண்டு,

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலிருந்து கீரிமலைக்குச் செல்லும்பாதை.

புனித வைகாசிமாதத்தில் ஓர் இரவு.

வீதியின் இரு மருங்கிலும் கார்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மக்கள் அங்குமிங்கும் செல்கின்றனர்.

நாதஸ்வர இன்னிசை காற்றில் மிதந்துவருகிறது. மங்கல வாத்தியங்கள் முழங்குகின்றன.

திருவிழாவா, கல்யாணமா?

நாதஸ்வரக் கச்சேரி முடிவடைந்துவிட்டது,

வீதியிலே நின்ற ஜனங்களும் முண்டியடித்துக் கொண்டு உள்ளே செல்கின்றனர். நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அந்தப் பெரிய மைதானத்தில் சனக் கூட்டம் நிரம்பி வழிகிறது. அலங்காரப்பந்தலின்கீழ் இருஇளமங்கையர் காலில் சலங்கை ஒலிக்க ஆடி அசைந்து வந்து நிற்கின்றனர்.

எல்லோர் கண்களும்அவர்கள்மீது படிகின்றன. 'சின்ன மேளம்' என்றுசொல்லப்படுகிற நாட்டிய மாதர் அவர்கள்.

அவர்கள் தங்களுக்குத் தெரிந்த சினிமாப்பாட்டுக்களைப்பாடுகிருர்கள்; பின்னர் ஆடுகிருர்கள்.

ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே சமயம் அந்த மைதானத்தையொட்டியுள்ள வீட்டில் 'கலைஞர்களுக்கும்' நண்பர்களுக்கும் ''விருந்து'' நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அங்கிருந்து ஒருவர் வருகிருர். வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். கறுத்த மேனி, எட்டு முழவேட்டியை மடித்துக்கட்டியிருக்கிருர். செம்மண் புழுதி படிந்து அழுக்காகத் தெரிகிறது. தோளில் ஒருதுண்டு. நேராக நடக்கக்கூடிய நிலையில் அவர் இல்லை. ஆட்டத்தைப்பார்த்துக் கொண்டு நிற்கும் மக்கள் மத்தியில் வந்து சால்வைத்துண்டால் அடித்து ''சனம் விலக்குகிருர்'' அவர் தான் இக்கொண்டாட்டத்தை நடத்துகிறவர்உபயக்காரர். அவர்மிடுக்கைப் பார்த்தாலேதெரிகிறது.

விருந்து நடைபெறும் இடத்தில் மூன்று உயிர்கள் ஏங்கிப்போய் நிற்கின்றன. அந்த உயிர்களைப் பலரும் சென்று காட்சிப் பொருளாகப்பார்த்து வருகின்றனர். திருவிழாக்காரருக்கு இதில் பெருமை அதிகம். அடிக்கடிவந்து அந்தமூன்று உயிர்களையும் தடவிக்கொடுக்கிருர். நள்ளிரவான போதிலும் அந்த மூன்று பிராணிகளுக்கும் மூன்று நான்கு பேர் அருகிலமர்ந்து தீனி ஊட்டுகின்றனர். திணித்துத் திணித்து உணவைவாய்க்குள் செலுத்துகின்றனர்.

அதிகாலையாகி விட்டது. அலங்கரிக்கப்பட்ட மோட்டார் கார், வீட்டுவாசலில் வந்துநிற்கிறது. மேளவாத்தியங்கள் முழங்குகின்றன.

மாப்பிள்ளை அழைப்போ!

வெள்ளையும் கறுப்பும் கலந்த கொழுத்த உயரமான உருவம் ஒன்றை

அந்த ''நாட்டாண்மைக்காரர்'' அழைத்துவருகிருர். அதன் கழுத்தில் தங்கச் சங்கிலி மின்னுகிறது. மலர் மாலை கழுத்தை அலங்கரிக்க திமிறிக்கொண்டு வருகிறது. அதன் முன்னே மற்றும் மூன்று கொழுத்த உயர்ந்த கரிய உருவங்களை மூன்று நான்குபேர் பெரும் சிரமத்துடன் அழைத்துவருகின்றனர்.

'நாட்டாண்மைக்காரர்' அழைத்துவந்தஉருவம் மாப்பிள்ளையல்ல. அவர் சென்ற ஒருவருஷ காலமாக தீன் ஊட்டி, சீராட்டிப்பாராட்டி மகனைப்போல் வளர்த்த ஆடு! அதை அவரும் அவரது மக்களும் அலங்கரிக்கப்பட்ட மோட்டார் காரில் ஏற்றுகின்றனர். மங்கல வாத்தியங்கள் முழங்குகின்றன. ஊர்வலம் ஆரம்பமாகிவிட்டது.

அலங்கரிக்கப்பட்டமோட்டார் காரில்அந்த ஆடு ஆஜானுபாகுவாக அமர்ந்திருக்கி

—'ஸ்ரீரங்கன்'—

றது. அதன் அருகில் ஒருவர் உட்கார்ந்துஅதைத் தடவிக்கொடுத்துக்கொண்டிருக்கிருர். முன்னே மூன்று கொழுத்த ஆடுகள் மலர் மாலைகளும் தங்கச்சங்கிலிகளும் கழுத்தை அலங்கரிக்க வெற்றிநடை போட்டுச் சென்றுகொண்டிருக்கின்றன. தாம் இவ்வாருக அழைத்துப் போய்க்கொண்டிருக்கும் மர்மத்தைஅந்தப் பிராணிகள்இன்னும்அறிந்து கொள்ளவில்லை!

ஊர்வலம் சென்றுகொண்டிருக்கிறது. வழி நெடுக வாணவேடிக்கைகள். ஊர்வலம்சென்றபாதைகளிலுள்ள

ஆடுகளை வழியனுப்பி வைக்கின்றனர்.

ஊர்வலம் நகர்கிறது. ''முனனேபோ. நிற்காதே''- வழியில் நின்று வேடிக்கை பார்ப்பவர்களை 'நாட்டாண்மைக்காரரும்,' மற்றும் சிலரும் தள்ளிவிடுகின்

மண்டபத்துக்குச் சிறிது தூரத்தின் முன்பாக நான்கு பக்கமும் அடைக்கப்பட்டு 'களம்' அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் நான்கு ஐந்து பேர் நிற்கின்றனர். இருவர் கைகளில் பளபளக்கும் இரு பெரிய கத்திகள். 'களத்தைச்' சுற்றி ஜனக்கூட்டம்.

அதிகாலை கோயிலில்பூசையாகிறது. இரண்டு கத்திக

கின்றன. ஆட்டுக்காரர் அவசர அவசரமாக அவற்றை வெளியே இழுத்துச் செல்கிருர். ஆடுகள்ஒன்றன்பின் ஒன்ருகக்களத்தில் தலைவேறு முண்டம் வேருகவீழ்ந்து கொண்டிருக்கின்றன, களம், இரத்தக்களரியாகின்றது. இரத்தம் தோய்ந்த கத்திகளை இருவர் சேலைத் துணியால் ஒவ்வொரு தடவையும் துடைத்து விடுகின்றனர்.

## "வன்னப்பொற் றேரேறி மாப்பிள்ளைபோற் சென்ருயே இன்னும் வரக்காணேன் எங்குற்ருய் எங்குற்ருய்"

றனர். பொலிசார் இருவரும் ஊர்வலத்தில் வருகின்றனர். குட்டி நாட்டாண்மைக்காரர்களும் 'முளைத்துவிட்டனர்.' ஒவ்வொருவரும் ஒவ்வொரு சட்டம் போடுகின்றனர். எந்த நேரம் 'அடிதடி' ஏற்படுமோவென்ற நிலை!

ஊர்வலம் வீதியைத் தாண்டி ஒழுங்கைகளுக்குள் திரும்பி நகர்கிறது!

விடிவெள்ளி உதித்துநிலம் தெரியத் தொடங்கிவிட்டது. மேளக்காரர் அத்தனை பேரும் வாசிக்கவேண்டும் என்ற உத்தரவு பிறக்கிறது. கோயில் வீதிக்கு ஊர்வலம் வந்துவிட்டது. சனக்கூட்டம் முட்டிமோதுகிறது. 'குட்டி நாட்டாண்மைக்காரர்' ஒருவர் தடிகொண்டு சுழற்றிக் கூட்டத்தைக் கட்டுப்படுத்துகிருர். பொலிஸ்காரர் ஒருவரும் சனக்கூட்டத்தின்மீது ஆவேசத்துடன் பாய்ந்து அடக்குகிருர். ஊர்வலம் கோவிலை வலம் வருகிறது.

கோவில் வீதியெங்கும் ஆடுகளுடன் ஆட்கள் நிற்கிருர்கள். அவர்களைச் சுற்றி ஜனக்கூட்டம். ஒவ்வொரு ஆடும் 'மொழு மொழு' வென நிற்கின்றன. அவைகளின் விழிகள் அங்கும் இங்கும் மிரள்கின்றன. ஆடுகளுக்கு விலை பேசுகின்ற



● அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் கொலைக்களத்தை நோக்கி அழைத்துச் செல்லப்படும் ஆடு.

ளுக்கும் பூசை நடக்கிறது. ஒருவர்வருகிருர். சுவாமியை வணங்குகிருர். கத்திகளில் ஒன்றை எடுத்துப் பூசையில் வைக்கப்பட்டிருந்த தேசிக்காயை அந்தக் கத்தியால் வெட்டுகிருர். பின்னர்கத்தியுடன் களத்திற்கு-கொலைக் களத்திற்குச் செல்கிருர்.

ஆடுகள் ஒன்றன்பின் ஒன்ருக 'கியூ' முறையில் களத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. அதிலும் 'நீ முந்தி

இரவு முழுவதும் திருவிழாக் கொண்டாடி மேள வாத்தியங்கள் முழங்க மாப்பிள்ளை போல் ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட தலைக்கடாவும் அதன் மூன்று 'தோழர்களும்' களத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன.

ஐயையோ! எப்படிச் சொல்வது! அவைகளுக்கும் அதே கதிதான்!

ஊர்வலமாக மாப்பிள்ளைக் கோலத்துடன் வந்த ஆடு, தலைவேறு முண்டம்வேருகக் கிடக்கிறது.

ஆட்டை வளர்த்து திருவிழாக்கொண்டாடிகொலைக் களத்துக்குக் கொண்டுவந்த அதன் சொந்தக்காரர்-அந்த நாட்டாண்மைக்காரர்- மயங்கிவிழுகிருர். நான்கு பேர் அவரைச் சுமந்து சென்று ஒரு தேநீர்க்கடையில் கிடத்தி காற்றுவீசி, தண்ணீர் தெளித்து முதல் உதவிசெய்கின்றனர்.

'' இரவு முழுக்க நித்திரையில்லை. 'தண்ணி' யும்கொஞ்சம்...அதுதான் விழுந்துவிட்டார்'' என்று சிலர் சொன்ஞர்கள்.

''ஒரு வருஷமா பிள்ளை போலவளர்த்தவர், பாவம்'' என்று மற்றும் சிலர் பேசிக் கொண்டனர்.

''வருடாவருடம்இப்படித்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில்எழுந்துவிடுவார்'' என்று ஒருவர் சாவதானமாகப் பதிலளித்தார்.

ஆடுகள் இன்னும்கொலைக் களத்துக்குச் சென்றுகொண்டிருக்கின்றன. வெட்டப்பட்டவைகள் கோயில்வீதிகளில் தலையும்முண்டமுமாக வீசப்பட்டுக் கிடக்கின்றன.

பேரம் பேசுபவர்களும், விலைதீர்த்து வாங்குபவர்களும் ஆங்காங்கே கூடி நிற்கின்றனர்.

ஆடுகள் வெட்டப்படும் அதே சமயம் ஒலிபெருக்கிகள் சினிமாப் பாடல்களை ஒலிபெருக்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு பாடல் - அது சினிமாப் பாடல் அல்ல- அடிக்கடி இசைத்துக்கொண்டிருந்தது.

அது என்ன பாடல் தெரியுமா?

''கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கிடைக்குமென்ருர், யேசு! தேடுங்கள் கிடைக்குமென்ருர்."

(5ம் பக்கம் பார்க்க)

## "காலிலொரு பாவி கழுத்திலொரு மாபாவி கோலி யிழுக்கக் கொடும்பாவி வெட்டினனே...."



● ஆபிரிக்க கானக வாசிகளின் நரபலியை ஞாபகப்படுத்தும் வகையில் நம்மூரில் நடைபெறும் வேள்விப்பலியில் ஒரு காட்சி.

வீடுகளில் வசிப்போர் நித்திரையிலிருந்துஎழுந்து வாசலுக்கு ஓடி வருகின்றனர். பாதிக்கண் தூக்கத்துடன் வேடிக்கை பார்க்கின்றனர். 'நாட்டாண்மைக்காரர்' தனக்குத்தெரிந்த வீட்டுக்காரர்களிடம் பெருமையுடன் தனது ஆடுகளைத்தடவிக்கொடுத்துக் காண்பிக்கிருர். அவர்கள் [illegible]

வர் சிலர். தங்கள் ஆடுகளைப்பற்றிப் பெருமைபேசுகின்றனர் ஆட்டின் சொந்தக்காரர்கள்!

ஆலயத்தின் முன் மண்டபத்தில் சுவாமி சாத்துப்படி செய்து ஆட்டு வாகனத்தின் மீது வைக்கப்பட்டிருக்கிறது. மண்டபத்தில் பொங்கல், பலகாரம், பழங்கள் நைவேத்திய [illegible]

நான்முந்தி' என்றபோட்டி!

களத்திற்குள் ஆடு கொண்டு வரப்பட்டதும் ஒருவர் தலைப்பக்கம் நின்று கயிற்றை இழுத்துப்பிடிக்கிருர். மற்றவர் ஆட்டின் பின் கால்கள் இரண்டையும் தூக்கி இழுத்துப்பிடிக்கிருர். கத்தியுடன் நிற்பவர் ஓங்கி கழுத்தில் ஒரு வெட்டு. 'சதக்' என்ற சப்தம். தலை ஒருபுறம், முண்டம் ஒரு புறமாக வீழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 17உ (30 5-65)

# சைவப் பண்பு

ஓர் ஊரிலே ஒரு செல்வந்தர் குடும்பம். அவர்கள் அழகான நாய்க்குட்டி ஒன்றை மிகச் செல்லமாக வளர்த்துவந்தார்கள். குழந்தைகளோடு அந்த நாய்க்குட்டி துள்ளித்துள்ளி விளையாடும். மோட்டாரிலும் சவாரி செய்யும்.

இப்படி வளர்ந்து வந்த அந்த நாய்க்கு காதின் பக்கத்தில் ஒரு புண் ஏற்பட்டது. துர்நாற்றம் எழுந்தது. அதுவரை அன்பு காட்டிய அந்த வீட்டு அம்மாள் நாய் மீது வெறுப்புக் கொண்டார். ஒரு நாள் இரவிலே அதை அடித்து வீட்டை விட்டுத் துரத்திவிட்டார். பாவம்! அந்தக் குளிரிலே அது எங்கே செல்லும்? அந்த வீட்டைத் தவிர அதற்குப் புகலிடம் வேறு எதுவுமில்லை.

வீட்டு வாசற்படியிலே அந்த நாய், தான் செய்த குற்றம் என்னவென்று புரியாமல், இரவு முழுதும் குளிரில் நடுங்கிக்கொண்டே பட்டினியாகப் படுத்துக் கிடந்தது.

காலையிலே வீட்டு அம்மாள் கதவைத் திறந்தார். அந்த நாயைக் கண்டார். கடுங்கோபம் வந்துவிட்டது. அட சனியனே! நீ இன்னும் ஒழியவில்லையா என்று ஆத்திரத்துடன் சீறினார். ஆனால் அந்த நாய் என்ன செய்தது தெரியுமா? அவ்வளவு இம்சை செய்த அந்த அம்மாளைக் கண்டதும், வாலை ஆட்டித் தன் அன்பைத் தெரிவித்தது! குணத்தில் சிறந்தது யார்? அந்த அம்மாளா? அல்லது நாயா?

இந்தக் குட்டிக்கதையை அன்புப் பெரியார் குணரத்ன அவர்கள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக் கூட்டத்தில் உருக்கமாக எடுத்துக்கூறி, வாயில்லாப் பிராணிகளிடம் நாம் அதிக அன்பு காட்டவேண்டியதை இடித்துச் சொன்னார்.

ஒரு நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் சரியாக அறியவேண்டுமாயின், அங்கு மக்கள் வாயில்லாப்பிராணிகளிடம் காட்டும் மனப்பான்மைதான் அதற்குச் சரியான உரைகல் என்று ஒரு மேற்கத்தி எழுத்தாளர் குறிப்பிட்டிருக்கின்றார். இந்தச் சோதனையின்படி பார்த்தால், இன்று நமது பண்பாட்டையும் நாகரிகத்தையும் பற்றி நாமே என்ன தீர்ப்புக் கூறுவோம்!

“எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன் என்றுரைத்தான் கண்ணபெருமான்.” மிருகங்கள், ஊர்வனங்கள், பறவைகள் மட்டுமல்ல; தாவரங்களுக்குக் கூட உயிர் உண்டு. அதனால்தான் அவை வளர்ந்து பூத்துக்காய்க்கின்றன. அந்த உயிர்களுக்கும் துன்பம் ஏற்படக்கூடாதென்று, நம் பெரியோர்களில் சிலர், செடிகளிலிருந்து பூசைக்குப் புஷ்பங்களையும் பறிக்கத் துணியாமல், அப்படியே மானசீகமாக அம்மலர்களையெல்லாம் இறைவனுக்கு அர்ப்பணித்துவிடுவராம்! ‘அர்ச்சனை பாட்டேயாகும்’ நமதுநாட்டின் பண்பாடும் நாகரீகமும் எவ்வளவு சிறந்தது.

‘அன்பே சிவம்’ என்ற கொள்கையுள்ள ஒரு சமூகம், கடவுளுக்கு உயிர்ப்பலிகள் கண்ருவியைப் பற்றிய விபரங்களடங்கிய ஒரு கட்டுரையை பிறிதோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். அன்பே உருவான தெய்வத்தின் பெயரால், உயிர்களைப் பலியிடுவது எவ்வளவு விபரீதம். அந்த மேல்நாட்டு ஆசிரியர் இதைப் பார்ப்பின் நமது பண்பாட்டையும் நாகரீகத்தையும் பற்றி என்ன சொல்லுவார்?

உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் இங்குவெகுவாகக் குறைந்துவிட்டது உண்மையே. என்றாலும் கீரிமலைக்குப்பக்கத்தில், அன்பான இறைவன் பெயரால் நடந்துள்ள அந்தப்படுகொலையிலே, படித்தவர்களும் அன்புத்தாய்மார்களும் கூட இருந்தனரென்பதைப் பார்க்கும்போது, வெட்கமும் துக்கமும் ஏற்படுவதாகவுள்ளது. நம்மைப்பற்றி நாமே எப்படிப் பெருமைப்பட முடியும்?

உணவுக்காக உயிர்களைக் கொல்வதென்பது வேறு விஷயம். அப்படிக்கொல்வதும் அப்பிராணிகளுக்குக்கூடுமானவரை இம்சை இல்லாமல் கொல்லவேண்டுமென்று கிளர்ச்சிகள் நடக்கின்றன. பிற உயிர்களுக்கு இம்சையற்ற சுத்த உணவைச் சாப்பிடவேண்டுமென்பதே சைவசமயத்தின் தனிச்சிறப்பு. அப்படி இருக்க, சைவ சமூகத்தைச் சேர்ந்தவர்களே, கருணைக்கடலான கடவுள் உறையும் கோவில்களில், உயிர்களைப் பலியிடுவதாயின், சைவ சமூகம் எப்படித் தலைதூக்க முடியும்? அச்சமூகத்தில் அன்பு எப்படி வளரும்? சைவ சமூகத்தின் முன்னேற்றத்தில் சிரத்தை கொண்டவர்கள், அந்தக்கொடுமையை நிறுத்த ஆவன செய்வதுடன், கூடுமானவரை எந்த உயிருக்கும் இம்சையில்லாமல் பார்த்துக்கொள்வர். “எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்க உன்தன் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே”

# நால்வர் தந்த நற்றமிழ்

## பைந்தமிழ்ப் பூங்கா—14

தமிழ் இலக்கியக் குவியல்களை நாம் திருப்பிப் பார்க்கும்போது சமய இலக்கியங்கள் பெரும்பான்மையாக இருத்தலை காண்கிறோம். சமணம், பௌத்தம், வைணவம் ஆகியவற்றைவிடச் சைவநூல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றிற் பேரிடத்தைக் கைப்பற்றியுள்ளன. இஃது சைவமும் தமிழும் இணைபிரியாதன என்பதை எடுத்துக்காட்டுகிறது. மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்க அரும்பாடுபட்ட சைவ அடியார்கள் பலராவர். இவர்கள் அருளிச் செய்த நூல்கள் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிற்கு படையெடுத்து வந்த சமண பௌத்த மதங்கள் தமது மதக்கருத்துக்களை வலியுறுத்தி மக்களைத் தங்கள் மார்க்கத்திற்கு திருப்ப முயன்றனர். அப்பொழுது செந்தமிழும் சிவநெறியும் தழைத்தோங்கவும், மற்ற மதங்களினைக் குழிதோண்டி புதைக்கவும் சைவநாயன்மார்கள் தோன்றினர். அப்பெரியார்களின் அயரா உழைப்பால் அகிலமுள்ளவரையும் சைவமும் அழியாது நிற்கிறது.

சமய குரவர் நால்வரில் முதலில் வைத்து எண்ணப்படுபவர் திருஞானசம்பந்தராவர். இவர் சைவத்திருமுறை நான்கினுள் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியருளியவர் ஆளுடையபிள்ளையாராகிய் சம்பந்தப் பிள்ளையின் வரலாறு திருத்தொண்டர் புராணத்தில் 1256 செய்யுட்களிற் பாடப்பட்டுள்ளது. மெய்யுணர்வும் செந்தமிழும் தழைத்தோங்கத் தோன்றிய பிள்ளையார் சிவநெறியில் அளவிலாப்பற்றுடைய சிவபாதவிருதயருக்கும் பகவதியாருக்கும் மகனாக அவதரித்தார். இவரது தோற்றத்தால் தமிழகம் உயர்வுபெற்றது. தமிழோடு இசையும் மெய்யுணர்வும் எங்கும்நிலைபெற்றன. இறைவனது திருவருள் எங்கும் நிலவப் புறச்சமயங்கள் ஒளி குன்றிச்சிதைந்தன.

இன்று இவ்விஞ்ஞான உலகில் மேற்கு ஜேர்மனியில் எட்டுவயதுக் கணிதமேதை தோன்றி நாட்டில் வியப்பை உண்டாக்குவதாகச் செய்தித்தாளில் படித்திருக்கிறோம். அன்று ஞானசம்பந்தக் குழவி தந்தையாருடன் நீராடச் சென்றார். கரையில் மூன்று வயதுடைய அச்சம்பந்தரை இருத்திவிட்டுத்தந்தையார் நீருள் மூழ்கினார். தந்தையைக் காணாத குழந்தை அழுதது. தோணிபுரத்திறைவர் உமாதேவியாருடன் வந்து ஞானப்பாலை ஊட்டினார். அப்பொழுது நீரில் மூழ்கி வெளிவந்த சிவபாதவிருதயர் பிள்ளையாரின் வாயின் இருமருங்கிலும் பால்வடிதலைக் கண்டார். வெகுண்டு இப்பாலை ஊட்டியவர்யாரென அடிக்க ஓங்கும்போது அக்குழவி தோணிபுரத்தீசரைச் சுட்டுவிரலால் காட்டிவளமார்ந்த செந்தமிழால் மெய்ப்பொருள் சிறக்கப்பாடியுள்ளமை ஒரு அற்புத நிகழ்ச்சியாகும். ‘தோடுடைய செவியன்’ எனத்தொடரும் பாடல்இறைவனின் திருவுருவத்தை படிப்போர் மனதில் பதியவைக்கிறது.

‘அலையாரும் புனல்துறந்த
அமணர் குண்டர்
சாக்கியர்
தொலையாதங்கு அவர்
தூற்றத் தோற்றங்
காட்டியாட் கொண்டீர்’

என்ற திருப்பாடல்பௌத்த சமண மதத்தினர் சிவபெருமானை பழித்துரைத்தமையும் ஆளுடைய பிள்ளையார் இறைவனின் திருக்கோலத்தைக் கண்ணாரக்கண்டு மகிழ்ந்தமையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெற்றுஉய்யுமாறு அருளிச்செய்த தேவாரங்கள் ஆயிரத்தியறு நூறும், காலவெள்ளத்திற்கும் கறையானுக்கும் போக இன்று எஞ்சியிருக்கும் தேவாரங்கள் முன்னூற்றெண்பத்திநான்காகும். மக்களின் குறைகளை நீக்கிச் செந்

**செல்வி க. பூரணம்**

தமிழ்நாட்டிற் பல அற்புதங்களை நிகழ்த்திய சம்பந்தருக்குத் தந்தையார் வேதவிதிப்படி திருமணம் செய்ய ஆயத்தம் செய்தார். திருமணத்தன்று ஆளுடைய பிள்ளையார்

‘காதலாகிக் கசிந்துகண்
ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்
குய்ப்பது
வேத நான்கினும்
மெய்ப்பொரு ளாவது
நாத நாமம் நமச்சி
வாயவே?

எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தினை பாடிப் போற்றி திருமணம் காண வந்தோர் பிறவித் துயரும் தீர அவர்களையும் சோதியினுள்ளே புகஅழைத்தார். தனக்கென வாழாப் பிறர்க்குரியராக வாழ்ந்த சம்பந்தர் திருமணம் காண வந்தோர் சோதியுள் புகுந்தபின் தம்காதலியுடன் சோதியை வலம் வந்து அதனுள்ளே புகுந்தார்.

விரைவில் முயல்போல் வந்து மறைந்த சம்பந்தர் காலத்தில் வாழ்ந்தவர் திருநாவுக்கரசநாயனாராவர். இவர் உழைப்பினால் முன்னேறிய உத்தமர். மருணீக்கியாராகிய நாவுக்கரசரை இளம்பருவமுதற் கொண்டு அன்புடன் வளர்த்து நன்னெறிப்படுத்தியவர் அவருடைய தமக்கையாராகிய திலகவதியாராவர். திலகவதியாரால் வளர்க்கப்பெற்ற மருணீக்கியார் சமண சமயப்போதனையில் மயங்கிச்சைவத்தை விட்டு அம்மதத்தைப் பின்பற்றினார். மதமாற்றத்தை கேள்வியுற்ற திலகவதியார் இறைவனை நினைத்துவேண்டி அவரை மீண்டும் சைவ சமயத்திற்கு திருப்பியதோடு சைவமும் தமிழும் தழைத்தோங்க பணியாற்றும் கடமையில் ஈடுபடச் செய்தார். அப்பரடிகள் தேனினும் இனிய தேவாரங்கள் மூலம் தாம்பெற்ற இன்பத்தை நாமும் பெற்று உய்யும் வண்ணம் அள்ளித்தந்திருக்கிறார். நாலாயிரத்துத் தொளாயிரம் பதிகங்களை நாவுக்கரசர் பாடியபோதும், இன்றுநமக்குக்கிடைப்பன முன்னூற்றுப்பத்து பதிகங்களேயாகும். இருதாரங்களுக்கிடையில் இறைவனைத் தோழனாகக்கொண்டு வந்த சுந்தரர் திருப்பதிகம் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் இறைவன் திருவருளால் புண்ணியத்தின் விளைநிலமாகத் திகழும் செந்தமிழ்நாட்டிலே திருமுனைப்பாடி நாட்டின் தலைநகராகிய திருநாவலூரிலே தோன்றினார்.

இவர் இளம் வயதிலே திருவும் கல்வியும் வாய்க்கப் பெற்றார். சுந்தரரது திருமண நாளிலே இறைவன் அவரை உலகஇன்பங்களில் சிக்கி உலவவிடாது தடுத்தாட்கொள்கிறார். இறைவனால் தடுத்தாற்கொள்ளப்பட்ட சுந்தரர் சிவபெருமான் துணையுடன் பரவையாரையும் சங்கிலியாரையும் மணந்து ஈற்றில் இறைவனடி சேர்கிறார். சுந்தரர் பாடியவை மூவாயிரத்தியெண்ணூறு தீந்தமிழ்த் தேவாரங்களாகும். நூறு தேவாரங்களே நம்பியாண்டார்நம்பியால் தொகுக்கப் பட்டுள்ளன.

இம்மூவர் பாடிய தேவாரங்கள் கி. பி. 1070—1120 ஆட்சிபுரிந்த குலோத்துங்கன் காலத்தில் தொகுக்கப்பட்டன என்பதைச் சிதம்பரக் கோவிலில் உள்ள கல்வெட்டினால் அறியலாம். மூவர் அருளிய தேவாரங்களும் மற்றத்திருமுறைகளும் அக்காலத்தில் திருக்கோவில்களில் வைத்து வழிபடப்பட்டுவந்தன. இத்திருமுறைகளை இசையோடு பாடுவதற்குத் திருக்கோவில்களில் சிலர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

சமண பௌத்த மதங்களினால் இடைக்காலத்தில் சைவம் தளர்ச்சியுறத்தீவிர பிரசாரம் நடைபெற்றபோதும் நாயன்மார்களும் பல சிவனடியார்களும் தோன்றிச்சிவநெறியைத் தழைத்தோங்கச் செய்தனர். சைவநெறி வளமுற அக்கால அரசர்களும் பல அரிய தொண்டுகள் செய்தனர். தமிழ்நாட்டையாண்ட முடியுடைமன்னரிற் சோழ பாண்டிய மன்னர்கள் எண்ணற்ற திருப்பணிகள் செய்துள்ளனர். திருக்கோவில்களைப் புதுப்பித்தும் பல ஆலயங்களைப் புனருத்தாரணஞ் செய்தும் உள்ளனர். தில்லைக் கோவிலுக்குப் பல மன்னர் பொன் வேய்ந்தமையைத் தமிழ்நாட்டு வரலாறுகளில் நாம்காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இப்பொழுது பொன் ஒடுகளுக்குப் பதில் போலி ஒடுகளே வேயப்பட்டுள்ளன. பல அரசியர் கோவில்களுக்கு நியமங்கள் வழங்கியிருக்கின்றனர். அந்நிய மதங்களின் செல்வாக்கை அழித்து அகிலமெலாம் சைவநெறிதழைத்தோங்க நாடாளும் காவலர்களும் நல்ல சமய குரவர்களும் ஆக்கப்பணிபுரிந்தனர். அவர்களது அயரா உழைப்பால் சைவமதம் தமிழ்நாட்டில் நிலைத்து நிற்கிறது. இன்று தமிழகத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம், திருவாவடுதுறை போன்ற ஆதீனங்களாலும், பல சைவ அன்பர்களாலும் சைவம் தழைத்தோங்க வழிவகுக்கப்பட்டு வருகிறது. எனினும் இந்திய அரசாங்கம் சர்வமத சமரசக்கொள்கையைப் பின்பற்றுவதால், பள்ளிகளில் சமயம் போதிக்கப்படுவதில்லை. மாணவ உள்ளங்கள் சமயங்களைப் பற்றி ஒன்றும் அறியாதவர்களாக் காணப்படுகின்றனர். ஈழத்தில் கல்லூரிகளில் சமயம் ஒரு பாடமாக இடம் பெறுவதால் சைவமாணவர்கள் சைவசமயத்தினைப் பற்றி அறிந்துகொள்வதற்கு வாய்ப்புஇருக்கிறது. சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் முயற்சியில் இந்து இளைஞன், இந்துசாதனம் போன்ற நிறுவனங்கள் முன்நிற்கின்றன. பல சைவ அன்பர்கள் சிவாலயங்களைப் புதுப்பித்து, பல திருப்பணிகளைச் செய்து வருகின்றனர். செந்தமிழும் சிவநெறியும் ஈழத்தில்

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

## எவரெஸ்ட் வெற்றி

சென்ற வாரம் இமாலயத்தின் எவரெஸ்ட் சிகரத்தை பாரத மலையேறும் கோஷ்டியினர் மும்முறை வெற்றிகொண்டனர். சுமார் 5 தினங்களுக்குள் இக்கோஷ்டியைச்சேர்ந்த 6 பேர், 29028 அடி உயரமான உச்சியைப் பார்த்துவிட்டு கீழிறங்கிய சாதனையை பல நாடுகளின் மலையேறும் ஸ்தாபனங்கள் பாராட்டின.

முதன்முதல் எவரெஸ்டை வெற்றி கொண்ட சம்பவம் பலருக்கு ஞாபகத்திலிருக்கும். ஏனெனில் அப்போது தான் ராணி எலிஸபெத்தின் பட்டாபிஷேகம் லண்டனில் நடைபெற்றது. 1953-ம் ஆண்டு பிரிட்டிஷ் மலையேறும் கோஷ்டியிலிருந்த இரு வெளிநாட்டு மலையேறிகளே இச்சாதனையைப்புரிந்தனர். நியுசிலந்தைச் சோர்ந்த எட்மண்ட் ஹில்லரியும், இந்தியாவைச் சேர்ந்த டென்ஸிங்நோர்கேயுமே அவர்கள்.

மகாராணிக்கு அப்போது அளிக்கப்பட்ட பரிசுகளில் மிகப்பெரும் பரிசாக, அப்போதைய பிரிட்டிஷ சாதனை முடிசூட்டு விழாவின்போது அறிவிக்கப்பட்டது.

அதன்பின் 1956-ம் ஆண்டில் சுவிட்ஸர்லாந்து மலையேறும் கோஷ்டி இருமுறை எவரெஸ்டை வெற்றி கொண்டது.

1963-ம் ஆண்டுஅமெரிக்க கோஷ்டி மும்முறை வெற்றி கண்டது.

எனவே இப்போது மும்மூன்றுதடவை ''வெள்ளிப் பனிமலையின் மீது உலாவியவர்கள்'' அமெரிக்கரும், இந்தியருமே.

நீங்கள் இதைப்படிக்கும் போது இந்தியக் கோஷ்டி நாலாவது தடவையாகவும் மற்றோர் முயற்சியிலீடுபட்டிருக்கக்கூடும்.

1960-ம் ஆண்டு சீனர்கள் எவரெஸ்டை அடைந்ததாகக் கூறுகிறார்களாயினும் இதுபற்றிச் சரியான ஆதாரம் எதுவுமில்லை.

தலைவர் மாசேதுங்கின் சிலையை அங்கு வைத்து விட்டு வந்ததாகச் சீனர்கள் கூறினர். அடிக்கடி பனியினால் மூடப்படும் எவரெஸ்டில் ஒருவேளை அது புதைந்திருக்கக்கூடும். சென்றவாரம் இந்தியக் கோஷ்டியில் சென்ற டென்சிங்கின் மருமகன் நவாங் கொம்பு புத்தரின் சிலை ஒன்றை மேலே விட்டுவந்தார். மாஸேதுங்கும், புத்தரும் அங்கு சென்றிருக்கும் போதிலும் வேதகாலமுதல் அது ஹிந்துக்களுக்கு ஒரு புனிதமான பர்வதமாகும்.

உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரம் 29002 அடிஉயரமானதுஎன்றுதான் நெடுகிலும் புத்தகங்களில் கூறப்பட்டுவந்தது. ஆனால் சமீபகால அளவைகளில் இன்னும் 26 அடி அதிகமாக இருப்பதாகக்கணக்கிடப்பட்டுள்ளது.

எவரெஸ்டை வெற்றி கொள்ள வெகுகாலத்துக்கு முன்பே பற்பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அங்குள்ள கடுங்காற்றும், பனிப்பாறைகளும் மனித முயற்சியைச் சாத்தியமாக்கவில்லை. மல்லோரி, இர்வின் என்ற இருவர் உச்சியை அடைந்ததாகவும், ஆனால் திரும்பாமல் அங்கேயே மாண்டதாயும் இமயமலையின் சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

எனினும் நவீன விஞ்ஞானம் 10 ஆண்டுகளுக்கு முன் இறுதியாக இமயத்தை வெற்றிகொண்டது பாராட்டத்தக்கது.

★

## கிளே வெற்றி

கிளே-லிஸ்டன் சண்டை சென்றவாரம் அமெரிக்க பார்லிமெண்டுக்கும் வந்துவிட்டது. ஒரு நிமிடத்தில் இச்சண்டை முடிவுற்ற விஷயம்பற்றி ஆராய கமிஷன் ஒன்றை நிறுவ வேண்டும் என ஒரு பிரதிநிதி கோரினார்.

ஸ்தல ராஜ்யத்தின் கவர்னர், இது பற்றி தாம் விசாரணை நடத்தப்போவதில்லை என்றும் தமது கோஷ்டியில் சென்ற நண்பர்கள் லிஸ்டனை வீழ்த்திய குத்தை பைனாகுலரில் நன்றாகக் கண்டதாகவும் ஏற்கனவே அறிவித்திருக்கிறார்.

லிஸ்டனுக்கு மூன்று குத்துக்கள் விழுந்தன. அவரை வீழ்த்திய குத்து மின்வேகத்தில் விழுந்து விட்டது. என்ன நடந்தது என்பதே பார்வையாளர்களுக்குத் தெரியாத வேகத்தில் சண்டை முடிந்துவிட்டது. எதுவாயினும் கிளேயின் குத்து தம்மில் விழுந்தது என லிஸ்டன் ஒப்புக்கொண்டதாலும், முன்னாள் சாம்பியனான பெட்டர்ஸன் இதை ஊர்ஜிதம் செய்திருப்பதாலும் விசாரணைக்கமிஷன் இருக்காது என எதிர்பார்க்கலாம்.

சாம்பியன் கிளேக்குக்கூட தமது குத்து எந்த முறையில் விழுந்தது என்பது தெரியவில்லை. அவரும், மற்றவர்களைப் போல சினிமாப் படத்தின் மூலம் அதைப் பார்க்கப்போவதாய்க் கூறினார் என்றால் நிச்சயம்அதன் வேகம் அதிசயமான ஒன்று தான்.

குத்துச் சண்டையைப் பற்றி இப்பத்தியில் பல முறை எழுதியிருப்பதால், இப்போது மேலும் விளக்கத் தேவையில்லை. எனினும் அதிபார குத்துச்சண்டையின் சரித்திரத்திலேயே ஒரு நிமிஷத்தில் முடிந்தசண்டை இதுதான். சுமார் 50ஆண்டுகளுக்குமுன், அதாவது 1908-ல் டப்ளினில் நடைபெற்ற அதிபாரச்சண்டையில் டொமிபேர்ன்ஸ், ஜிம் ரோச்சை ஒரு நிமிஷம் 28 விநாடிகளில் ''நொக்அவுட்'' செய்ததுதான் இதுவரை உள்ளசாதனை. ஆனால் கிளே இதை ஒரு நிமிஷமாகக் குறைத்தது புதிய சாதனை.

கிளேக்கு இனி அடுத்த சவால்காரர் பெட்டர்ஸன் என்ற முன்னாள் சாம்பியன். குத்துச்சண்டை நிபுணர்கள் இப்போதே அதன் முடிவு பற்றிக் கூறுவது கஷ்டமான விஷயம் அல்ல.

குத்துச்சண்டையில் ஒருவருடைய நிறை, வேகம், உத்தி ஆகியவற்றைப் போலவே ஒருவரது வயதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. கிளேக்கு 23 வயது தான். சாதாரணமாக இளைஞர்களுக்கு இரத்த ஓட்டமும், வேகமும் அதிகம். அதுவும் கிளேயின் வேகம் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று.

இந்தச் சண்டை ''ஏர்லி பேர்ட்'' என்ற அமெரிக்க செய்மதிமூலம் 14 நாடுகளுக்கு டெலிவிஷன்செய்யப் பட்டது. உள்நாட்டில் 258 தியேட்டர்களில் டெலிவிஷனில் காட்டப்பட்டது. வழக்கம் போலவே அதன் ஆடோபம் அதிகம்.

அநேகமாக அடுத்தவாரம் இலங்கைத் திரைகளில் இது காட்டப்படும். பல குத்துச் சண்டை ரசிகர்கள் இதைக் காண ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை,

வழக்கம்போலவே இந்தச் சண்டையும் பலருக்கு ஏமாற்றத்தையே அளித்தது. 15 ரவுண்டு சண்டையை ரசிக்கலாம் என்று நினைத்தவர்கள், ஒருநிமிஷத்தில்ஏமாற்றத்துடன் திரும்ப நேரிட்டது பரிதாபத்துக்குரிய விஷயம். 10 ரவுண்டுகளுக்குப் பின்புதான் ''நொக் அவுட்'' செய்ய வேண்டும் என்ற விதியை ஏற்படுத்துவதன் மூலமே ரசிகர்களை திருப்திப்படுத்த முடியும். அதிபார குத்துச் சண்டை விதிகள் அதற்கேற்ப திருத்தப்பட வேண்டும்.

★

## மே 27

சென்ற மே 27-ம் திகதி நேருவின் முதலாவது சிரார்த்ததினம் பலநாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டது. நேரு வசித்த தீன்மூர்த்தி இல்லமும், அவர் துயில் கொள்ளும் சாந்திவனமும் மக்களின் புனித யாத்திரை ஸ்தலங்களாக விளங்கின.

அன்று காலை அகில இந்திய ரேடியோவின் ஆங்கிலச் செய்தியறிக்கை ஒரு செய்தியாகவே படவில்லை. கவிதா நயமும் இலக்கியச் செறிவும் கொண்ட ஓர் அழகு வர்ணனையாக இருந்தது. அதுமட்டுமன்றி அறிவிப்பாளரின் குரல் உருக்கமும், குழைவும் கொண்டு இடத்திற்கேற்ற சந்தம் கொடுத்தது. அன்றைய சிறந்த நிகழ்ச்சிகளில் ஆங்கிலச் செய்தியறிக்கையையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

# யாழ்ப்பாணத்தில் வேள்விப்பலி

(5ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா உயிர்களும்
தன்னுயிர் எனவே
ஏற்றி மகிழ்ந்தாரே-யேசு
ஏற்றி மகிழ்ந்தாரே

எப்படி? எந்த இடத்தில், எந்தச் சந்தர்ப்பத்தில், எப்படியான பாட்டு!

ஐயோ! சைவசமயமே!

°° °° °°

''கிரேக்கருக்குக் குறையயாத அளவிலே, பௌதிக நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சியில் விஞ்ஞான சாத்திரக் கருத்துக்களையும் முறைகளையும் அமைக்கும் முயற்சியிலும்; நிச்சயமான அறிவுத் தொகுதியொன்றைப் படைத்து அதனைத் தொழில் துறையிலே திறம்படப்பயன்படுத்தும் முயற்சியிலும், இந்துக்கள் பங்கு பெற்றுள்ளனர் இந்துக்களின் விஞ்ஞானக் கருத்துக்களும், ஆராய்ச்சி முறையும் ஆசியாவிலும் - கீழை நாட்டிலும் மேலைநாட்டிலும்-சீனாவிலும் ஜப்பானிலும் ஸாரஸன் சாம்ராஜ்யத்திலும் இயற்கைத் தத்துவ இயலின் போக்கின் மீது பேரளவிற்குச் சக்தியைச் செலுத்தியுள்ளன'' 1915-ம் ஆண்டு வெளியான பழைய இந்துக்களின் நிச்சயசாத்திரங்கள் என்ற நூலின் முன்னுரையில் டாக்டர் பி. ராஜேந்திர நாத் சீல் என்பார் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

இந்துக்களைப் பற்றியும் இந்து சமயதத்துவங்களைப் பற்றியும் மேல் நாட்டினர் பலர் புகழ்ந்து எழுதியிருக்கின்றனர்.

இந்து சமய தத்துவங்களை இன்றும் மேல் நாட்டினர் பலர் ஆராய்ச்சி செய்துவருகின்றனர், இந்தியா நேபாளம், போன்ற நாடுகளுக்கும் அவர்கள் செல்கின்றனர்.

இன்று அவர்களில் யாராவது இலங்கையில் குறிப்பாக இந்துக்கள் பெரும்பான்மையினராக வாழும் யாழ்ப்பாணத்துக்கு வந்து மேற்குறிப்பிட்ட வேள்விப் பலி காட்சியைக் கண்ணுற்றால் இந்துசமயத்தைப்பற்றி என்ன நினைப்பார்களோ? ''ஆபிரிக்காவுக்கு வந்து விட்டோமோ'' என்று நினைத்துக் கொண்டு திகிலுடன் உடனடியாக திரும்பிச் சென்றாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

°° °° °°

ஆங்கிலப்படங்களில், (இப்பொழுது சில தமிழ், இந்திப்படங்களிலும் கூடத் தான்) கதாநாயகனும் அவனது தோழனும் காட்டுமிராண்டிகள் வாழும் இடத்தில் அகப்பட்டுக் கொள்வதாகவும் அங்குவசிப்பவர்கள் தங்களுக்குப் பெரு விருந்து கிடைத்து விட்டதாகவும் ஆட்டம் ஆடி கூச்சல் போட்டு அவர்கள் இருவரையும் தங்கள் குலதெய் தெய்வம் (காடன், மாடன் என்று நாம் சொல்லும் கணங்களைப் போன்றவை) முன்னிலையில் பலியிடுவதும் நாம் காணும் காட்சி. அந்தக் காட்சியைப் பார்ப்பவர்கள் காட்டுமிராண்டிகள் கையில் அகப்பட்டவர்களை அவர்களது கோஷ்டியினர் வந்து காப்பாற்றிவிடவேண்டுமேயென அங்கலாய்ப்பார்கள். இப்படி ஆபிரிக்காக் கண்டத்தில் சில இடங்களில் இன்னும் நடைபெறுவதாக சில வருடங்களுக்கு முன் அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையை ஆராயச் சென்ற ஒருவர்தாம் உயிர் தப்பிய சம்பவங்களுடன் சுவையாக எழுதியிருக்கிறார்.

ஆபிரிக்க காட்டு வாசிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

## "தெய்வமுமில்லையோ என்மனது தேற்றிடவே"

## ஆடு கதறியது

ஆசை மகனேயென் அன்பான கண்மணியே
நேசத் துரையே நெடும்பயணம் போனாயோ

ஓராறு மாதம் உடம்புநொந்து பெற்றெடுத்த
சீராளா! தெற்குத் திசைப்பயணம் போனாயோ

நேராத கோவிலெல்லாம் நேர்ந்து தவமிருந்தே
ஆராத காதலுடன் ஐயோநான் பெற்றெடுத்தேன்

கல்லுவைத்த கோவிலெல்லாம் கைகுவித்து நோன்பிருந்து
செல்வக் குமரா சிறப்புடனே பெற்றெடுத்தேன்

புல்லுந் தவிடும்நல்ல பிண்ணாக்குந் தீற்றியுனை
அல்லும் பகலுமவர் அன்பாய் வளர்த்தாரோ

அல்லும் பகலுமவர் அன்பாய் வளர்த்ததெலாங்
கல்லுங் கரையக் கழுத்துவெட்டு வெட்டிடவோ

வன்னப்பொற் றேரேறி மாப்பிளைபோற் சென்றாயே
இன்னும் வரக்காணேன் எங்குற்றாய்? எங்குற்றாய்?

காரியமொன் றின்றியிந்தக் கன்னெஞ்சுப் பேதையர்கள்
மாரியம்மன் கோவிலிலே வாட்பலிக்கு வைத்தாரோ

பிள்ளையைப் போல்வளர்த்துப் பிள்ளையற்றச் சண்டாளர்
துள்ளித் துடிதுடிக்கத் துண்டாக வெட்டினரோ

காலிலொரு பாவி கழுத்திலொரு மாபாவி
கோலி யிழுக்கக் கொடும்பாவி வெட்டினனோ

உன்றன் றசையரிந்தே யோலைக் குடலைகட்டிச்
சென்றுசென்று விற்றனரோ தின்றுபசி யாறினரோ


ஆசாரி மேலோ அதிகாரி தன்மேலோ
மாமாரி மேலோவிவ் வன்பழிதான் சேருமடா

கொன்றவன் மேலோ கொடுத்தவன் தன்மேலோ
தின்றவன் மேலோவித் தீயபழி சேருமடா

வாயில்லாச் சீவன் வதையாதீர் என்றுசொல்ல
வாயுள்ளார் நெஞ்சம் மரமோ கருங்கல்லோ

சைவமு மில்லையோ சான்றோரு மில்லையோ
தெய்வமு மில்லையோ வென்மனது தேற்றிடவே.

—நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர்



புத்தபகவான் ஞானம்பெற்ற புனிதபோதி விருட்சத்தின் கிளை கொணர்ந்து இறக்கப்பட்டதாக வரலாறு கூறும் புனித கடற்கரைக்கு அணித்தாயுள்ள ஒரு சிற்றூரில் வேள்விப்பலிக்காக கோலாகலமான உற்சவம் நடைபெறுகிறது. படத்தில் காணப்படுவோர் நடன மங்கையர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றண்டுத் தமிழ்ப்புலவர்கள்

— இ. பிரேமகாந்தன் —

இருபதாம் நூற்றுண்டு இலக்கிய உலகத்தின் மறுமலர்ச்சிக்காலம். இந்த நூற்றுண்டில் தமிழ் இலக்கியம் பல வழிகளிலும் மறுமலர்ச்சியுடன் புத்துயிர் பெற்றுப் பொலிவுடன் வளர்ந்திருக்கின்றது; வளர்ந்து கொண்டே வருகின்றது. இந்தத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருமை புதுமைக் கவி பாரதிக்கே உரியது என்ருல் மிகையாகாது.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் எழுந்த இலக்கியங்களிற் பெரும்பாலானவை அக்கால மக்கள் வாழ்க்கையோடு தொடர்பில்லாதனவாகவே காணப்படுகின்றன. மக்களுக்காக மக்கள் பிரச்சினைகளைக் கருவூலமாகக் கொண்டு இலக்கியம் யாத்த முதல் தமிழ்ப் புலவன் பாரதியேதான். அதுமட்டுமல்ல. கடுமையாகச் சென்று கொண்டிருந்த ஒரு நடையிலிருந்து எளிய, புதிய, இனிய நடையை வகுத்துக் கொண்ட முதல்தமிழ்ப் புலவனும் பாரதியேதான். இன்று பாரதியைப்பின்பற்றி ஒரு புதிய புலவர் வரிசையே வளர்ந்து கொண்டு வருகின்றது.

எங்கெங்குக் காணினும்
சக்தியடா - தம்பி
ஏழுகடல் அவள்
வண்ணமடா! அங்குத்
தங்கும் வெளியினிற்
கோடியண்டம், அந்தத்
தாயின் கைப்பந்தென
[illegible] ஓடுமடா

என்ற கன்னிக் கவிதையைப் பாரதியிடம் சமர்ப்பித்து எழுக புலவன் என்ற ஆசீர்வாதத்தைப் பெற்று அன்று முதற் பாரதிதாசன் என்று அழைக்கப்பட்டு வரும் கனக சுப்புரத்தினம், பாரதி வகுத்த பாதையிற் சென்று வேகமும் விறுவிறுப்புமுள்ள பல நல்ல பாடல்களைப் பாடியுள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் என்ற புனைபெயருக்குச் சாலவே பொருந்தக்கூடிய நிலையில் நின்று பல புதிய கருத்துக்களையும் புதிய சொற் பிரயோகங்களையும் தனது கவிதையின் கண் நடமாடச் செய்திருக்கின்ருர். "புரட்சிக்கவி" என்ற பாடலில் அவருடைய புலமைத் திறனையும் மொழிநடையின் விறுவிறுப்பையும் கருத்து விசித்திரங்களையும் நன்கு காணமுடிகிறது.

பாரதத்தின் விடுதலையே பாரதியின் உயிர்மூச்சு, தாழ்ந்த தமிழன் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்பது பாரதிதாசனின் உயிர் மூச்சு. தமிழ்மக்களுக்குத் தமிழ் நாட்டிலும் தமது இனத்திலும், தமது மொழியிலும் ஆர்வமும் பற்றும் ஏற்படச் செய்த பெருமை பாரதிதாசனுக்கே உரியது. தமிழ் எங்கள்உயிர் என்று அடித்துக்கூறியதுடன் மட்டும் நில்லாது எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று பிறிதோர் இடத்திற் சங்கநாதம் எழுப்பியுள்ளார். அத்துடன் நின்றுவிடவில்லை. வேற்று நாட்டாரை மாற்று இனத்தாரைப்பார்த்து பாடுகின்ருர்;

"பொங்கு தமிழர்க்கு இன்னல்விளைத்தாற், சங்காரம் நிஜமெனச் சங்கேமுழங்கு"

என்று புரட்சிக்கொடி உயர்த்தியுள்ளார்.

பாரதிமீது பாரதிதாசன் எவ்வளவுஉரிமை பாராட்டினுரோ அதேயளவுபற்றும் பக்தியும் தேசிய விநாயகம் பிள்ளையவர்களுக்கும் உண்டு. பாரதி வகுத்த அதே பழகு தமிழ் நடையிற் பாடிய புலவர்களுள் பாரதிதாசனுக்கு அடுத்து வைத்து எண்ணப்பட வேண்டியவர் "கவிமணி" அவர்கள். இருபதாம் நூற்ருண்டுப்புலவர் வரிசையில் கவிமணி அவர்கட்கு ஒரு தனி இடமுண்டு. நாஞ்சில்நாட்டு வேளாளரின் தாயமுறையைப் பரிகசித்து 1917-ம் ஆண்டு 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்று ஒரு ஹாஸ்யக் கவிதை நூலை இவர் பாடினுர். கவிமணி ஒரு குழந்தைக் கவிஞனுங்கூட. ஆதலால் இவருக்குச் சிறுவர் மத்தியில் நல்ல மதிப்பு உண்டு. கவிமணியின் "கருணைக்கடல்", "பாரசீகக்கவியமுதம்" முதலிய கவிதைகளில் அன்னரின் உள்ளத்தெளிவையும் கவிதைத் திறனையும் நாம் நன்ருகப்பார்த்து அனுபவிக்க முடிகிறது.

(அடுத்த வாரம் முடியும்)

## சிறுவர் பூங்கா

### பொம்மை

— ரோகிணி —

பொம்மை பொம்மை
பொம்மை
புதுமையான
பொம்மை
அம்மா வாங்கித் தந்த
அருமையான
பொம்மை

படுக்கப் பாயும்
கேளாள்
பஞ்சு மெத்தை
கேளாள்
உடுக்க உடை
வேண்டாள்
உண்ண உணவு
வேண்டாள்

கள்ளம் இன்றிச்
சிரிப்பாள்
கருத்தே இன்றி
விழிப்பாள்
சொல்லே எதுவும்
சொல்லாள்
சோகம் கொள்ள
மாட்டாள்

அடிக்க அடிக்கச்
சிரிப்பாள்
அசையா தங்கே
இருப்பாள்
பிடிக்க ஓட மாட்டாள்
பெருமை பேச
மாட்டாள்

### மழை நான்!

— மாவிட்டபுர ஆனந்தன் —

நீல வானப்
போர்க்களத்தே
நிகழ்வதென்ன
சண்டை?
ஞாலமெலாம்
நடுங்க வங்கே
போடுவதார்
குண்டை?

ஏழு வண்ண
வில் வளைத்தே
எய்தவர் யார்
அம்பை?
சூழும் போரைக்
கண்டு முகில்
சிரிக்குது பார்
தெம்பை!

சீற்றங்கொண்டு
மூசியதார்?
வீசுதிங்கே காற்று!
ஆற்றிடாமலே
மழையாய்
அழுவதும் யார்?
சாற்று!

### எங்கள் அன்னை

-சாரணையூர்-

அம்மா சுட்ட
அப்பம் - மிக
அருமையான அப்பம்
சும்மா சொல்ல
வில்லை - தேன்
சேர்ந்த சுவை அப்பம்.

○

ஒன்று தின்ற
தங்கை - இன்னும்
ஒன்று கேட்டு அழுதாள்
நன்று என்று
சொல்லி - அம்மா
நாலு அப்பம் தந்தாள்.

○

அன்னை அன்பைச்
சொல்லி - தங்கை
ஆடிப்பாடி நின்ருள்
என்ன சொன்ன
போதும் - அவள்
எங்கள் அன்னையன்ருே!

இப்புதிய, கையடக்கமான
டப்பாவில்
பொன்ட்ஸ்
டிரீம்பிளவர் டால்கம் பௌடர்
இப்போது விற்பனையாகிறது




அழகு பெண்மணிகள் பாவிப்பது
பொன்ட்ஸ்
டிரீம்பிளவர் டால்கம் பௌடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாயிறு கதை மலர்

—சூலாகீப்

பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள்; பெற்றபிள்ளை
பித்தானாலென் செய்வாள் பின்?

— பட்டினத்தடிகள்.

# தூரத்துப் பச்சை

— ஆ. தேவராஜன் —

அன்று ஏப்ரல் பத்தாம் திகதி சிறுகந்தைத் தோட்டத்தில் சம்பளம். இன்னும் நான்கே நாட்களில் புத்தாண்டு வரப்போகிறதே, செலவுக்குக்காசு வேண்டுமே என்று தொழிலாளிகள் அனைவரும் அன்று தோட்டத்திற்குச் சென்றிருந்தனர். அப்போது மணி இரண்டு இருக்கும். முத்தாயி தான் அன்று பறித்த தேயிலைக்கொழுந்துகளை நிறுத்துக்கொடுத்துவிட்டு, தோட்டத்து அலுவலகத்துக்கு நடந்துகொண்டிருந்தாள், தலையிலிருந்து கொட்டிக் கொண்டிருந்த வியர்வையை முன்தாவணியால் துடைத்துக் கொண்டபடியே.

அப்போ பெரிய கிளாக்கர் ரணசிங்க "ஏ! முத்தாயி! இந்தா ஒனக்கு காகிதம் வந்தது" என்று சொன்னார். "ஆமா, எனக்குங்களா சாமி!" என்று சொல்லிக் கொண்டே முத்தாயி அவரிடம் சென்றாள். அவளுக்கு என்ன எழுத வாசிக்கத் தெரியுமா? அவளை வாழ்வித்து வந்தது அவள்பேசத் தெரிந்த தமிழும், ஆண்டவன் கொடுத்த உடலும் தான். கடிதத்தை எடுத்தவள் அதில் என்ன இருக்கிறது என்று அறியத் துடித்தாள். கடிதத்தை அங்கிருந்த தோட்டத்து வாத்தியார் இராசதுரையிடம் கொடுத்தாள் வாசிக்க. வாத்தியார் கடிதத்தைப் படித்துக்காட்டினார்.

"அன்பார்ந்த அம்மா!

இத்தனை காலமாக உங்களை மறந்திருந்ததையிட்டு வெகுவாக மனவேதனை அடைகின்றேன். இனி என்றும் மறவேன். நான் சுய அறிவு பெற்றுவிட்டேன்.

நான் பத்து நாட்களுக்கு முன்பு சம்பளம் எடுத்த அன்று இரவுபுறக்கோட்டை வீதியில் நடந்துகொண்டிருக்கும் பொழுது காடையர்கள் என்னைத் தாக்கி என்னிடமிருந்த பணத்தையெல்லாம் கொள்ளையடித்து விட்டார்கள். கையிலிருந்த கைக்கடிகாரத்தையும், மோதிரத்தையும் பறித்துவிட்டார்கள். உடம்புக்கு ஒன்றுமில்லை.

சாப்பாட்டுக் கடைக்காசு, அறை வாடகை, இன்னும் மற்றக்காசுகளும் இன்னும் கொடுபடவில்லை. கடன் எடுத்து இவற்றைக் கொடுத்து விடலாம் என்று நினைத்தேன். ஆனால் என் முயற்சிகள் எதுவும் பயன்தரவில்லை. அவர்கள் எல்லோரும் நெருக்கிப் பிடிக்கிறார்கள். நெடுங்காலம் இப்படிக் காலம் கழிக்கமுடியாது. ஆகையால் உடனே ரூ. 150/- அனுப்பி வையுங்கள்.

இப்படிக்கு
உங்கள் அன்புமறவாதமகன்
நடேசன்"

கடிதத்தைப் படித்து முடிந்ததும் முத்தாயியின் கண்களிலிருந்து துளிர்த்த கண்ணீர்த்துளிகள் அவள் முன்தானையை தோய்த்துவிட்டன. ஏழைத் தொழிலாளியாக இருந்தும் அவள் நூற்றி ஐம்பது ரூபாவை பெரிதாக ஒன்றும் எண்ணவில்லை. "வாத்தியார் ஐயா, நம்ம பயலுக்கு ஒடம்புக்கு ஒண்ணுமில்லைத்தானுங்களே? திரும்ப ஒருக்கா சரியாப் பாருங்க" என்று மீண்டும் கேட்டாள். "அதைத்தான் அவன் அழுத்தமாக எழுதியிருக்கிறான்- பயப்படாதே" என்று சொன்னார் வாத்தியார். "மாரியம்மா சாமி! உனக்கு பூசை வைக்கிறேன், நம்ம பயலைக் காப்பாத்திக்கோ" என்று தோட்டத்துமாரியம்மன் கோவில் பக்கத்தைப் பார்த்து கைகூப்பிக் கும்பிட்டுச் சொன்னாள்.

நடேசனை எண்ணி முத்தாயி கண்ணீர்விடாத நாள் ஒன்று கூட இருந்திருக்கமுடியாது. அவன் தன்னை இனி நினைக்கவே மாட்டான் என்று கூட எண்ணியிருந்தாள் முத்தாயி. அந்த நிலையில் இருந்தவளுக்கு இந்தத் துக்ககரமான கடிதமும் ஒருவித மகிழ்ச்சியையும் தெம்பையும் அளிக்கத்தான் செய்தது. அன்று அவளுக்குச் சம்பளமாக எழுபத்தைந்து ரூபாகிடைத்தது. புது வருடம் நெருங்கிவந்துகொண்டு இருந்ததால் தோட்டத்தில் பணம் கடன் எடுக்க முடியவில்லை, அவளிடமும் இருப்பாகச்சேமிப்புப் பணமிருக்கவில்லை. ஆறு மாசங்களுக்கு முன்பு அவள் கடும் சுகவீனமாக பிம்புரை ஆஸ்பத்திரியில் படுத்திருந்தாள். ஒரு மாசம்வரை ஆஸ்பத்திரியில் இருந்ததால் கையிருப்புப் பணமும் செலவாகி கடனும் எடுத்துச் செலவழித்தாள். முத்தாயி நேர்மை தவறாத பெண் என்பதால் அவளுக்குக் கடன் கொடுக்க யாரும் தயங்குவதில்லை. சுகவீனத்துக்காக எடுத்த கடனை ஒரு சீட்டுப் பிடித்து கடந்த மாசம்தான் எடுத்துத்தீர்த்தாள். எனவேதான் அவளிடத்தில் கையிருப்பாகபணம் இருக்கவில்லை.

இருந்தாலும் மத்துகமத்தில் தானே நூற்றுக்குப் பத்துவீதமும், பதினைந்து வீதமும் வட்டிக்குப் பணம் கொடுக்கும் "பணப் பெருச்சாளிகள்" உண்டு. முத்தாயி மத்துகமம்சென்று நூறுரூபா வட்டிக்குக் கடன் எடுத்துவர எண்ணினாள். ஆனால் அவள் புறப்படுமுன்னர் கடனுக்குச் சாமான் கொடுத்து வரும் லலிதா கடை முதலாளி வழிமறித்துக் காசு கேட்டார். முத்தாயி தன் மகனின் நிலையைச் சொல்லிப் பின்பு கடனைத் தருவதாகச் சொன்னாள். ஆனால் அவரா விட்டு வைப்பார்? தோட்டத் தொழிலாளிகளைத் தங்கள்பணச்சுரங்கத் தொழிலாளிகளாக மாற்றி வாழ்கின்ற முதலாளிமார் பலர். கடைகளில் மாசக் கணக்கு வைத்துக் கடனுக்குச் சாமான்கள் வாங்கும் தொழிலாளிகள்பலர். இவர்களுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. அவர்கள் அறிவு வளர்ச்சிக்காகப் பாடுபடும் எவருமே இந்த நாட்டில் இல்லை. ஏதோ முதலாளிகள் சொல்லுகின்ற கணக்கை அப்படியே தீர்த்துக் கட்ட மட்டும் அவர்களுக்குத்தெரியும். ஒட்டிக்கு இரட்டியாகக் கணக்கு எழுதிவைப்பார்கள் முதலாளிமார்கள். இந்த மாசம் பத்தாம் திகதி கடன் காசைக் கொடுத்தால், திரும்ப அடுத்த மாசம் பத்தாம் திகதி கணக்குப் பார்க்கும் பொழுது இந்த மாசம் முதல் திகதியிலிருந்து கணக்குப் பார்ப்பார்கள்முதலாளிகள். இப்படிப்பட்ட முதலாளிகளில் ஒருவர் தான் லலிதா கடை முதலாளி. அவர் சொன்னார் —

"அவுறுது வறுவதுதானே- அதிங்மிச்சங் சாமாங்எடுக்க வேணும்தானே. நம்மலுக்கு அம்பது றூபா இப்ப தா. மவன் சங்கதி எல்லாங் நம்மலுக்கு சரிப் போருங் இல்லே."

"சாமி! வருஷத்துக்கு முன்னடி நான் தாறேன் சாமி. கொஞ்சம் தயவு பண்ணுங்க."

"ஏ! அது எல்லாம் நான் கிட்ட பேசவேணுங். சல்லி தாறியா இல்லியா" என்று மிரட்டினார் முதலாளி. முத்தாயியின் எண்ணத்தில் இடி விழுந்தது. கிடைத்த சம்பளத்தில் ஐம்பது ரூபாவை முதலாளியின் கையில் கொடுத்துவிட்டு மத்துகமத்துக்குப் புறப்பட்டாள். ஒரு மணி நேரம் வீதியில் தூங்கிக் கிடந்த பின்தான் ஒரு பஸ் கிடைத்தது. அதில் ஏறிக் கொண்டு போனாள். அங்கிருந்த செட்டியாரிடம் ரூ. 150 கேட்டாள். அவர் பிணை "நோட்டு" ஒன்று எழுதி அதில் ரூ. 350 என்று தொகையைக் குறித்துவிட்டு ரூ. 150ல் அந்த மாச வட்டி கழித்து ரூ. 135 கொடுத்தார். எழுதவோ வாசிக்கவோ தெரியாத முத்தாயி தன் விரல் அடையாளத்தைக் கொடுத்துவிட்டுப் பணத்தை எடுத்துக் கொண்டு போனாள். அன்றே பணத்தைத் தந்தியில் அனுப்ப முடிவு செய்தாள். அதற்குரிய பத்திரத்தைத் தபாற்கந்தோரில் பெற்றாள். ஆனால் அதை நிரப்பிக் கொடுக்கயாருமில்லை. அரைகுறையாக ஆங்கிலம்படித்துவிட்டு 'பெட்டிசன்' எழுதிக் கொடுத்துப் பிழைப்பவர்கள் சிலர் நகரத்திலுண்டு. இவர்கள் சுளை சுளையாக ஏழைகளிடம் பணம்பிடுங்குவார்கள் கூலியாக. அப்படி ஒருவர்அகப்பட்டார். அந்த ஆசாமி அதை நிரப்பிக் கொடுத்துவிட்டு இரண்டு ரூபாய் கேட்டார். ஏதோ பெரியூ உதவியைச் செய்து விட்டதாக எண்ணிய முத்தாயி உடனே இரண்டுரூபாவைக் கொடுத்துவிட்டு, தபாற்கந்தோரில் தன் வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்பினாள்.

ஃ ஃ ஃ

முத்தாயிக்கு நாள் முழுதும் ஒரே வேலை; ஒரே பசி; ஒரே களைப்பு. ஆனால் இப்போ இருட்டி விட்டது. சோறு சமைத்துச் சாப்பிட அவளுக்கு மனம் வரவில்லை. கோப்பி ஒன்று போட்டுக் குடித்துவிட்டுப் பாயில் புரண்டு படுத்தாள். முத்தாயிக்கு வயசு ஐம்பதுஇருக்கும். ஓயாத உழைப்பால் உடல் மெலிந்து ஒல்லியாக இருந்தது. தலையிலும் இலேசாக நரைவிழுந்திருந்தது.

முத்தாயியின் மனம் கடந்த ஆண்டு புத்தாண்டுக்கு நடேசன் தோட்டத்துக்கு வந்திருந்ததை நினைவுகூர்ந்தது. முதல்நாள் வந்த நடேசன் புத்தாண்டு தினத்தன்றே திரும்பிவிட முடிவு செய்தான். முத்தாயி அன்று முழுவதும் நின்றுவிட்டுப் போகும்படி எவ்வளவோ கெஞ்சியும் அவன் கேட்கவில்லை. அன்று புத்தாண்டு ஆகையால் தான் விதவையாக இருப்பதால் முதன் முதலில் பணம் கையில் கொடுக்கக் கூடாது என்று எண்ணி அவன்பணப்பையில் ஐம்பது ரூபாவை வைக்க அதைத் திறந்தாள் முத்தாயி. அப்போது நடேசன் யாரோ ஒரு பழைய நண்பனைக் காணச் சென்றிருந்தான். முத்தாயியின் கண்கள் பணப் பையில் வைக்கப்பட்டிருந்த அந்த வாலைக்குமரியின் படத்தின் மேல் நிலைத்து விட்டன. அவள் படத்தைஎடுத்தாள். அதன் பின்புறத்தில் ஏதோ எழுதியிருப்பதை கண்டாள். நல்ல வேளையாக தோட்டத்து வாத்தியார் இராசதுரை அவ்விடத்தால் போய்க் கொண்டிருந்தார். அவரிடம் அதைக்காட்டி என்ன எழுதியிருக்கிறது என்று கேட்டாள். அப்பொழுது "ஆருயிர்க் காதலன் நடேசனுக்கு அன்பின் சின்னமான மோகனாவிடமிருந்து" என்று எழுதியிருக்கிறது என்றார் வாத்தியார். முத்தாயியின் கண்கள் கலங்கின. அழுது விட்டாள். அப்பொழுது நடேசன் அங்கு வந்தான். திறந்திருந்த தன் பணப் பையில் வைக்கப்பட்ட மோகனாவின் படத்தைக் காணவில்லை என்பதை உணர்ந்தான். அதற்குள் ஐம்பது ரூபாய் வைக்கப் பட்டிருப்பதை அவன் அவதானிக்கவுமில்லை. தன் தாயின் கையில் அந்தப் படம் இருப்பதைக்கண்டு "என் அன்பின் சின்னத்தைக்கண்டு உனக்கு ஒப்பாரி வேறையா? தா இங்கே" என்று அதட்டி அந்தப் படத்தை வாங்கினான். கொழும்பு மத்திய தந்தி அலுவலகத்தில் வேலைபார்க்கும் நடேசனுக்கு தோட்டத்துலயின்வீடுகள்எப்படிப் பிடிக்கும்? அதிலும் நடேசன் கொழும்புப் போலி வாழ்வில் ஊறிப்போனவன். முத்தாயிக்கு கோபம் வீறிட்டு வந்தது. "யாரடா இந்தப் பொண்ணு?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"அவள்தான் உன்மருமகள். சே! நீ சுத்த கர்நாடகமாச்சே! இல்லே! அவள் என் டாளிங்-"

"உன்னை வளர்த்துஇப்படி வைச்சது இதுக்காடா?"

"சுத்த நான்சென்ஸ்! இது என் தனிப்பட்ட விஷயம். நீ இதில் குறுக்கிட என்ன யோக்கியதை இருக்கிறது?" ஆவேசத்துடன்வீட்டைவிட்டுக்கிளம்பினான். அன்று போனவன்போனவன்தான் முத்தாயி கடும் சுகவீனமாக பிம்புரை ஆசுப்பத்திரியில் இருந்தபொழுது போட்ட கடிதத்துக்குப் பதில்கூடப் போடவில்லை. அவன் ஆண்டில் ஒருமுறை எழுதி வந்ததையும் நிறுத்திவிட்டான்.

ஃ ஃ ஃ

நடேசன் இப்படிகோபித்துக்கொண்டு புறப்பட்டது முத்தாயியின் சிந்தையை சுழலவிட்டது. முத்தாயி பிறந்த குடும்பமே பெரும் வறுமைப்பட்ட குடும்பம்— ஐந்து பெண்கள்— அதில் இவள்தான் கடைசி. போதிய சீதனம் இல்லாததால் யாரும் இவர்களை திருமணஞ் செய்ய முன்வரவில்லை. முத்தாயி கல்யாணம் செய்யும்பொழுது வயசு இருபத்தைந்து. ராமசாமிக்கங்காணி இரண்டாம் தாரமாக முத்தாயியைத் தன் ஐம்பதாவது வயதில் திருமணம் செய்து கொண்டான்.

மூன்று ஆண்டுகள் பிள்ளையில்லாமல் இருந்தார்கள். பின்புதான் நடேசன்பிறந்து இரண்டு ஆண்டுகளுக்குள் ராமசாமிக்கங்காணி இறந்துவிட்டான். தன் உடலைக் கசக்கிப் பிழிந்து பணமாக்கி நடேசனைப்படிப்பித்தாள் முத்தாயி. முத்தாயி மிக அழகான பெண். சின்னச்சாமி கங்காணிகூட முத்தாயியைத் தன் மனைவி இறந்ததும், திருமணம் செய்யஎவ்வளவோபாடுபட்டான். ஆனால் தன் மகன் நடேசனின் நல்வாழ்வு தான் திரும்பக் கல்யாணம் செய்தால் அற்றுவிடும் என்று எண்ணி மீண்டும் திருமணம் செய்ய உறுதியாக மறுத்துவிட்டாள் முத்தாயி. நடேசன் எஸ். எஸ். ஸி யில் சித்தியடைந்து தபால் தந்திச் சேவையில் சேர்ந்தான். அப்போது சீட்டிலே வந்த ரூ. 500 க்கு ஒரு கைக்கடிகாரம், ஒரு மோதிரம் உடுப்பு எல்லாம் வாங்கிக் கொடுத்தாள் முத்தாயி.

ஃ ஃ ஃ

கொழும்பு மத்திய தந்தி அலுவலகத்தில் வேலைபார்த்தான் நடேசன். அங்குதான் தொலைபேசி இயக்குநராக (டெலிபோனிஸ்ட்) இருந்த செல்வி மோகனா ராமச்சந்திரனைச் சந்தித்தான். அவர்கள் உறவு காதலாக மாறிற்று. அவளைக் கடைக்கு அழைத்து வண்ண வண்ணச் சேலைகள் வாங்குவான். அழகுப்பொருட்கள் வாங்குவான். சினிமாவுக்கு கடற்கரைக்கு எல்லாம் அழைத்துச் சென்றான். இப்படி உறவாடியதால் நண்பர்களிடமும் அறிமுகமானவர்களிடமும் கடன்பட்டும் செலவழித்தான். பின்பு ஒரு அவசரத்துக்குத்தானும் கடன்படமுடியாத அளவுக்கு கடன்பட்டுவிட்டான்.

ஒருநாள் மாலை காலிமுகக் கடற்கரைக்கு இருவரும் சென்றிருந்தனர். அங்கே இவர்களைப்போல் எத்தனை காதல் சோடிகள் வந்து உலவுவார்கள். அவன் அரவணைப்பிலே நெஞ்சிலே சாய்ந்து கொண்டிருந்தாள் மோகனா. மெல்லென வீசிய இளம் தென்றல் அவள் கூந்தலை முந்தமிட்டுச் செல்லும் பொழுது அவள் முகத்தில் ஒரு தனி அழகுசொட்டியது.

"கண்ணா!"

"மோகனா! உம்— சொல்லு."

"இந்தக்கடலிலிருந்து அலைகள் ஏன் நீங்குவதில்லை"?

"அது இயற்கையின் நியதி"

"இல்லை எங்களைப்போல் அன்பால் பிணைப்புண்டு கிடக்கின்றன. அன்புக்கு அழிவில்லாத அளவில் அவற்றின் பிணைப்புக்கும் அழிவில்லை."

"ஓகோ இந்த ஆராய்ச்சி ஞானம் எப்போ உதயமாயிற்று.?"

"உங்களைக் கண்டநாள் முதல்— உங்கள் அன்பால் கட்டுண்ட பின்பு."

"மோகனா! உண்மையில் நீ என் அன்பின் சின்னம் அம்மா."

"கண்ணா! நீங்கள் என் வாழ்வின் உயிர்"

இப்படிக்கதைத்துக் கொண்டிருக்கையில் மழை பெய்ய ஆரம்பித்தது. உடனே டாக்ஸியில்கொண்டுபோய் மோகனாவை அவள் வீட்டுக்கு அண்மையில் இறக்கிவிட்டு நடேசன் வீடு சென்றான்.

ஃ ஃ ஃ

அன்று மழையில் நனைந்ததிலிருந்து அடுத்தநாள் முதல் நல்ல காய்ச்சல். ஒருகிழமை அலுவலகமே செல்லவில்லை. மோக

([illegible] பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞவின் பேச்சே இல்லை. நடேசனுடன் அறையிலிருந்த சிவகுமாரன்தான் எல்லா உதவியும்செய்தான். சம்பளத்திலன்று நடேசன் அலுவலகம் சென்ருன். அங்கு அவனைத் திடுக்குறச் செய்யும் செய்தி ஒன்று காத்திருந்தது. டெலிபோனிஸ்ட் மோகனு டாக்ஸி முதலாளி சாம்பசிவத்துடன் ஓடிவிட்டாள் என்ற செய்திகிடைத்தது. அவன் மனம் இடிந்தது; உள்ளத்தில் ஒரு வெறுமை தோன்றியது. சம்பளத்தை எடுத்து அன்று முதல் குடிக்கத் தொடங்கினுன். தன்கவலையை மறக்கக் குடித்தபடியே இருந்தான். சம்பளப் பணமும் எல்லாம் முடிந்து விட்டது. சாப்பாட்டுக்கடைக் காசு, அறைவாடைக்காசு எல்லாம் பாக்கியாக இருந்தன. இந்த நெருக்கடியான நிலையில்தான் கடைசித் தஞ்சமாகத் தன்தாய்க்கு எழுதினுன். அதை எழுதும் பொழுது அவன்சிறிதும் நம்பிக்கை கொண்டவனுக எழுதவில்லை. அவன் தற்கொலை செய்யத் தீர்மானித்துவிட்டான்.

°° °° °°

அடுத்தநாள் ஏப்ரில் பத்தாம் திகதி மாலை அலுவலகத்திலிருந்து வரும்பொழுது குடித்துவிட்டுத்தான் வந்தான். கையில் ஒரு சாராயப்போத்தலும் இரண்டு பெட்டி நித்திரைக் குளிசைகளும் கொண்டுவந்தான் நடேசன். சிவகுமாரன் அவனை ஒரு மாதிரியாக கட்டிலில் படுக்க வைத்தான். வெறி மிகுந்து விட்டதால் மீதிச்சாராயப் போத்தலையும், நித்திரைக்குளிகையையும் மறந்துவிட்டான் நடேசன். அவன் வாய் ''மோகனு... அன்பின் சின்னம்... மண்ணுங்கட்டி!'' என்று புலம்பியது. அப்போது அங்குதந்திவந்தது—அதில் ரூ. 150/- வந்திருந்தது. இதை உணர்ந்த சிவகுமாரன் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து சாற்றைத் தேநீரில் கலந்து நடேசனுக்குக்கொடுத்தான். வெறி நீங்கி எழுந்த நடேசனிடம் தந்தியைக் கொடுத்தான் சிவகுமாரன். அதைக்கண்டதும் ''அம்மா!'' என்று தன்னை அறியாமலே அலறினுன் நடேசன்.

மறுநாள் கடன் எல்லாம் தீர்த்து விட்டு, மத்துகமத்துக்குத் தாயிடம் புறப்பட்டான் நடேசன். சிறுகந்தைத் தோட்டத்தில் தன் வீடு சென்றதும் தாயின் காலில் அழுதபடியே வீழ்ந்தான், முத்தாயி தன் மகனைக் கண்ட மகிழ்ச்சியில் கண்ணீர் விட்டாள். மகனை எழுப்பி மனமுவந்து உணவளித்தாள்.

(யாவும் கற்பனை)

## குறுநாவல்

# வானத்தாமரை

— நா. யோகேந்திரநாதன் —

''சாரு ஏது உன்னைக் காணவே முடிவதில்லை?''

அவளின் பார்வை நீர்த்திரையால் மறைக்கப்பட்டது. ''ஹூம்! ஏதோ என்னைத்தேடி அலைந்து ஓய்ந்தவர் மாதிரிக் கூறுகிறீர்களே. உங்களைக் காணவேண்டுமென்று எத்தனைதரம் புரபஸர் வீட்டைச்சுற்றி அலைந்திருக்கிறேன் தெரியுமா?''

இந்த ஒரு சில நாட்களில் உண்மையில் அவன் அவளை நினைக்கவில்லைத்தான். அதற்காக அவளின்மேல் விருப்பமில்லையென்று கூறிவிடமுடியுமா? அவன் நிலை அவனுக்கே புரியவில்லை. சந்திரமதியின் அமைதி, பண்பு என்பவற்றுக்குள் அவன் கட்டுப்படுகிருன். அவளின் கோரிக்கைகள் யாவற்றிற்குமே சாதகமாக நடக்கிருன். அவள் வார்த்தைகளை அவனுல் மீறமுடிவதேயில்லை. ஆனுல் சாருகேசியோ அவன் இதயத்தில் காதல் உணர்வுகளை எழுப்பிவிட்டவள். அவளை நினைக்கும் பொழுது ஒரு இன்பமயமான உலகம் அவனை ஏற்றுக் கொள்வதை அவன் உணர்கிருன்.

அந்த இருவரில் யார் அவன் உடைமை? அவன் யாருக்குரியவன்? அவனே இருவரிடமும் தன்னை மறக்கிருன். ஒருத்தியின் முன் நிற்கும்பொழுது மற்றவளை மறக்கிருன். அப்படியானுல் அவர்கள் இருவரும் ஒருவரா? அந்த இருவரிடமுமே அவன் மனம் தனித்தனி ஒன்றுவதை அவன் உணர்ந்தான். அவன் உணர்வுகள் அவனுக்கே புரியாதவையாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தன:

தேடியடைந்து கண்டு பிடித்துவிட்ட உரிமைப் பொருளிடம் தன் செல்லக் கோபத்தைக் காட்டமுயற்சி செய்து அடைந்த தோல்வியையும் பொருட்படுத்தாது விழிக் கடையில் காதலுணர்வு காட்டி நின்ற சாருகேசியின் முன்னுல் சந்திரமதிப் பொட்டிட்டுத் தானேற்றுக் கொண்டதை மறந்து போயிருந்தான். சாருகேசியைஆசைநிறைந்த கண்களுடன் ஒருமுறை உற்றுப்பார்த்து விட்டு மெல்லச் சிரித்தாள். அத்துடன் அவள் கவலைகள்யாவும் பறப்பதை அவனுல் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவளுக்கு ஏற்பட்ட அந்த மகிழ்வைக் காணப் பொறுக்காத அவனுடைய துன்பங்கள் கூட அந்த இடத்தை விட்டு அகன்றிருந்தன. அவனுடைய கண்களில் தோன்றிய புத்தொளி அவளைக் கிறங்க வைத்தது. வெட்கத்தைத் தாங்க முடியாதவளாக அவ்விடத்தை விட்டு ஓட ஆரம்பித்தாள்.

''சாருகேசி!''

அவன் அழைப்பை அவள் காதிற் போட்டுக்கொண்டதாகவே தெரியவில்லை. அவள் மானுகத்துள்ளிஓடிய பொழுது சிவலிங்கத்தின் மனதில் அவளைத் தொடர்ந்து ஓடவேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. வரிசையாக வளர்ந்திருந்த இரப்பர் மர நிழல்களினிடையே அவள் நிழலும் மறைந்து மறைந்து விழுந்துகொண்டிருந்தது. ஓடி ஓடிக்களைத்தவளாய் ஓர் இரப்பர் மரத்தில் சாய்ந்து நின்றுகொண்டாள். அம்மரத்தின் மறுபக்கமாகச் சிவலிங்கம் போய் நின்ருன். எழும்பிப் போயிருந்த பட்டைகளைச் சாருகேசி அதிவேகமாக உடைத்தாள்.

''சாரு!''

''ம்...,'' விழிகளை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

அவளை அழைத்த அவனே எதுவும் பேசாமல் அவளை விழுங்கிவிடுவதுபோல்பார்த்துக்கொண்டிருந்தான். அவள் அழகு மட்டும் ஒரு திரவப்பொருளாக இருந்திருந்தால் அப்படியே அதை உறிஞ்சிக் குடித்திருப்பான். அவனைப் போன்றவர்களைப் படைத்ததனுல் தான் போலும் இறைவன்அழகைத் தனித்து நிற்காத ஒன்ருகப் படைத்திருந்தான்.

அவளுக்கோமிகவும் வெட்கமாகப் போய்விட்டது. மேலும் வேகமாகப் பட்டைகளை உடைக்க ஆரம்பித்தாள்.

அவன் மீண்டும் அழைத்தான். ''சாரு!''

நிலத்தைப்பார்த்த கண்கள் அவன் முகத்தைப் பார்த்தன.

''இந்த இயற்கைத்தாய் வரைந்து வைந்திருக்கும் அழகுக்கோலத்தைப் பார்த்தாயா?''

அவளோ அங்கேயே பிறந்து அங்கேயே வளர்ந்தவள். அவள் இதுவரை இரசிக்கும் கண்களுடன் மலைகளையும். மடுக்களையும் பார்த்தது கிடையாது. ஆனுல், அவன் குறிப்பிட்ட பொழுது சுற்றி ஒரு முறை நோட்டமிட்டாள். இயற்கைத்தாய் சிறந்த ஓர் ஓவியக்காரி தான் என்றுதோன்றியது.

''சாருகேசி! அதோ பார் வானத்தை நாளை தொட்டு விடுவதுபோல் கம்பீரமாக வளர்ந்து நிற்கும் மலை. அதன் மடியில் தங்க நிற வெய்யில் பட்டுப் பளபளக்கும் சிற்ருறுகள்.''

அவளும் அவனைப்போன்ற உணர்ச்சியுடன் தான் ரசித்தாள். ஆனுல் அவனைப் போல் வார்த்தைகளில் வடிக்க முடியாதவளாகத் தவித்தாள், ''நன்ருயிருக்கிறதே.''

''சாதாரணமாக அப்படிச் சொல்லிவிடமுடியாது சாரு. ஈழத்தின் மேல் இயற்கைக்கு ஒரு தனிக் காதல். தன் கணவனை விதவிதமாக அலங்கரித்துப் பார்க்கும் பண்புள்ள மனைவியைப் போல் இயற்கை ஈழக்காதலனை. அணு அணுவாக அலங்காரம் செய்துவைத்திருக்கிருள்.''

இருவரும் இயற்கையை மனமார, மனமொத்து பிய்த்துப் பிய்த்து இரசித்துக்கொண்டிருந்தார்கள். அவன் அந்தக் காட்சிகளின் அழகில் லயித்துக்கொண்டிருந்தான். ஆனுல் அவளோ அந்த அழகுச் சூழ்நிலையில் அவனும் தானும் கானம் பாடி ஓடித்திரிவதாகக் கற்பனை செய்து கொண்டிருந்தாள்.

சின்னஞ்சிறு சிட்டுகளுக்கும், வண்ணக் குருவிகளுக்கும் கூட அவர்களின் நிலை மகிழ்வை யளித்தன போலும். ஆரவாரம் செய்து அவர்களுக்கு ஆசிகூறிக்கொண்டிருந்தன. ஆனுல் போயும் ஒரு பொறுமை கொண்ட மனிதனின் கண்களிலுமா அவர்கள் படவேண்டும்!

''சாருகேசி

உலகத்தை மறந்த அவர்களை இங்கே இழுத்து வந்த கர்ஜனை சின்னையனுடையதாக இல்லாமலிருந்தால் எவ்வளவுநன்ருக இருந்திருக்கும். ஆனுலும் சாருகேசி துணிவை இழக்கவில்லை,''

''ஓ, நீயா?''

''ஆமாம்! உன்மாமன்!''

''என் மாமன் தான்! உறவு முறையில்''

''ஏன்! உரிமை முறையில் இல்லையோ...?

சாருகேசி கேலியாகச்சிரித்தாள், ''பாவம்! முடவனின் தேனுசை''

''ம்...''. சின்னையனின் முகம் பயங்கரமாக மாறியது. கோபத்தால் அவனுடைய மீசை துடித்தது. அவன் கவனம் சிவலிங்கத்தின் மேற் திரும்பியது, சாருகேசியுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாமென்று உன்னை எச்சரித்திருக்கிறேனே! நினைவிருக்கிறதா?''

சிவலிங்கம் அவன் கேள்வியை அலட்சியம் செய்து விட்டு சாருகேசியின் அருகில் செல்ல அடியெடுத்தான்.

''நில்! நகர்ந்தால் கத்தி உன் வயிற்றைக் கிழிக்கும்''

சிவலிங்கம் திரும்பிப் பார்த்தான். சின்னையனின் கையில் கத்தி பளபளத்தது.

அவனே அதைப் பொருட்படுத்தாதவனுக நடந்தான். சின்னையன் கத்தியை ஓங்கினுன்.

சாருகேசி அந்தக் காட்சியைக் காணமாட்டாதவளாய் கதறினுள். தன்கண்களைக் கைகளால் பொத்திக் கொண்டாள்.

சின்னையனின் கத்தி சிவலிங்கத்தின் வயிற்றினுள் ஒரு சில அங்குலம் பயணம் செய்து விட்டு ஒரு கவிஞனின் இரத்தத்தை ருசி பார்த்த பெருமையில் பிடிக்குள் மடங்கிக் கொண்டது.

— 7 —

சிறு சிறு துளிகளாக வீழ்ந்து கொண்டிருந்த மழை. அந்த நர்ஸிங் ஹோம் ஆபீஸறையின் யன்னலின் மேல் பட்டுத் தெறித்து, வழிந்து கொண்டிருந்தது.

டாக்டர் சத்தியமூர்த்தி குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். அவர் நெற்றியில் ஏற்பட்ட சுருக்கங்கள் அவர்எதையோ ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிருர் என்பதைக் காட்டின. மழைத்துளிகளின் பின்னுல் 'கண்ணுமூச்சி', விளையாடிக் கொண்டிருந்த மலைச்சிகரங்களைப் பார்த்தவாறு யன்னலின் அருகில் போய் நின்ருர் அவர் நடந்துகொண்ட விதத்திலிருந்து அவர் கண்களும் கவனமும் ஒத்துழைக்கவில்லையென்பது புரிந்தது.

அவருக்குச்சிறிது தூரம் தள்ளிக் கூனிக் குறுகியவராய் ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார், அவருடைய நரைத்த தலையும் சுருக்கம் விழுந்த முகமும் அவர் ஏறக்குறைய ஐம்பது வயதைத்தாண்டியவர் என்பதை எடுத்துக்காட்டின. அவர் பேசிய விதங்களிலிருந்து அவர்தான் சாருகேசியின் தந்தைஎன்றுதெரிந்தது

நீண்ட நேர அமைதிக்குப் பிறகு டாக்டர் பேசினுர், ''சிவலிங்கம் இன்னும் கண் திறக்கவில்லை. ஆனுல் உயிருக்கு அநேகமாக ஆபத்து வராது என்று தான் நம்புகிருேம்.'' கிழவன் தலையைக் குனிந்துகொண்டார். தன் மருமகன் செய்த காரியத்துக்காக அவர் நொந்து கொண்டார் போலும். ஆனுலும் அவருக்கு ஏற்பட்ட வெட்கம், வேதனை முதலியவற்றை ஒருவாறு வெளியே தெரியாமல் சமாளித்தார்.

டாக்டர் தொடர்ந்தார், ''ஆனுல் என்ன இருந்தாலும் 'பொலிஸ் ரிப்போட்' கொடுக்கவேண்டியது என் கடமை. மிகுதியை நீங்கள் தீர்த்துக்கொள்ளுங்கள்.''

''ஐயா!'' கிழவரின் கண்களில நீர் மல்கியது,'' ஒரே மகள். அவளுக்கும் இதில் சம்பந்தம் உண்டு வழக்கு, கோடு என்று ஏற்பட்டால் எல்லாம் என் பெண்ணுல்தான் நடந்தது என்பது உலகத்துக்கு தெரிந்துவிடும். பிறகு'' பாதியில் நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தார், ''என் பெண் வாழவேண்டியவள் டாக்டர்?''

''அதற்காக...?'' டாக்டர் குறுக்கிட்டார்.

''நல்வாழ்வுக்குள் அவளை விட வேண்டும் என்ற ஆசையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக்கிழவன் தன் பெண்ணைத் தள்ள ஆறு குளம் தேடவேண்டிய பரிதாப நிலை ஏற்படாமல் காப்பாற்றுங்கள்''

சத்தியமூர்த்திக்கு நெஞ்சம் உருகியது என்னவோ உண்மைதான். ஆனுல் கடமைக்கும் கண்ணியத்துக்கும் கட்டுப்பட்டு அவர் நடத்தும் வாழ்க்கையை ஒரு முறை நினைத்துப்பார்த்தார். நீதிக்கெதிராகச் செல்ல அவருக்குத் தைரியம் வரவில்லை. ''முத்தையா! உன்னைப் பார்க்கவோ மிகவும் பரிதாபமாகஇருக்கிறது ஆகவேசிவலிங்கம்விழிக்கும். வரையும் நான் பொலிஸுக்கு எந்தத் தகவலும் கொடுக்கவில்லை. ஆனுல் சிவலிங்கம் வழக்கு வைக்க வேண்டுமென்று விரும்பினுல் நான் உங்களுக்கு உதவி செய்யமுடியாது.''

கிழவனுக்கு அந்தநேரத்தைப் பொறுத்தவரையில் அதுவே மகிழ்ச்சியையளித்தது. தன் நன்றியைத் தெரிவித்து விட்டு அறையை விட்டு வெளியேறினுர். நோயாளிகளைப் பார்வையிடுவதற்காக டாக்டரும் தன்னறையைவிட்டு வெளியே வந்தார். (தொடரும்)

### எங்கே மறைந்தனையோ?

மன்னுதி மன்னர்களெல்லாம் சூடிய மணிமகுடங்கள் இப்போது எங்கே இருக்கின்றனவென்று தெரியுமா?

பொருட் காட்சிச் சாலைகளில்! அதுபோன்று இன்று பெரிதாகத் தோன்றும் முதலாளித்துவம், கம்யூனிசம் போன்ற சக்திகளெல்லாம் நாளை காட்சிச்சாலைப் பொருள்கள்தான்.

முடிவாக இருக்கப் போவது எது? அது தான் சர்வோதயம் - ஆண்டவன் ஆட்சி அல்லது ஆண்டவன் நிலையில் உள்ள மனிதர் ஆட்சி.

''லேடன்'' LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்கள்
- ஸ்போட் சேட்டுகள்
- ரி சேட்டுகள்
- கால் மேசுகள் (Nylon & Cotton)

லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்

7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இசையின் கதை

# மக்களுக்குத் தேனமுதூட்டும் கலைஞர்கள்

— வி. என். பி. —

சோலையில் சூரியன் உதயமாவதற்கு முன் எழுந்திருக்கும் பட்சி, பூச்சிபுழுக்களைப் பிடித்துத்தின்று வயிறு நிரம்பியபின் ஒரு மரக்கிளையிலிருந்து பாடத்துவங்குகிறது. தொட்டிலில் அழுது புரண்டு கொண்டிருந்த பாலன் கடைவாயில் பால் வடியும் வரை குடித்தபிறகு ஆனந்த மேலீட்டால் 'ஆ, ஊ' என்று கிளுகிளுக்கிறான். இசை இயற்றும் கலைஞனும் இப்படித்தான். வயிறு நிரம்பி உள்ளமும் நிறைந்த போதுதான் அவன் இசையைப்பற்றி சிந்திக்க முடிகிறது. வயிற்றில் பசியும் மனத்தில் கவலையும் குடிகொண்டிருந்தால் கவனம் எங்கேயோ போய்விடுகிறது; கற்பனை வற்றிவிடுகிறது.

இந்த உண்மை ஒரு தனி மனிதனுக்கு மட்டுமல்ல— ஓர் இனத்துக்கும் ஒரு நாட்டுக்கும் பொருந்தும். ஓர் இனம் அல்லது ஒரு நாடு வறுமையாலும் போர் பூசல்களாலும் வேறு விதமான தொந்தரவுகளினாலும் அல்லல் பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் அங்கே இசை முதலிய கலைகள் வளர்வது தடைப்படும். அமைதியும் சுபிட்சமும், செல்வமும் சந்தோஷமும் நிறைந்திருந்தால், சோலையில் பாடும் பட்சியைப்போல, மனிதனும் இன்பவசப்பட்டு, தன் கலையுணர்ச்சிக்கு இடமளிக்கிறான். இதனால் தான் முற்காலத்து மன்னரும் பிரபுக்களும் கலைஞர்களுக்கு எவ்விதக் குறைவும் இல்லாதபடி அவர்களை போஷித்து வந்தார்கள். நாடு குழப்பமாயிருந்தால் கலைஞனும் கலக்கமடைகிறான். கலை வளர்ச்சி குன்றிப்போய் விடுகிறது.

ஆதலால் இசை முதலிய கலைகளின் வளர்ச்சி அரசியல், பொருளாதாரம் முதலியவற்றோடு நெருங்கிப் பிணைந்திருக்கிறதென்று கூறலாம். தற்காலத்தில் இந்த உண்மைக்குக் கீழ்க்கோடு போட்டு விளக்கவேண்டும். ஏனென்றால் இந்த ஜனநாயக யுகத்தில் முற்காலத்து அரசர் செய்த கலைவளர்க்கும் பணியை பொதுமக்களும் அவர்கள்மூலம்அரசாங்கமும் செய்து வருகின்றனர். மேடைக் கச்சேரி முதலியவற்றின் மூலம் பொதுமக்களும் வானொலி முதலியவற்றின் மூலம் அரசாங்கமும் கலைஞனுக்கு ஊதியமளிக்கின்றனர். இவர்களுடைய ஆதரவு திருப்தியாயிருந்தால் கலைஞனும் திருப்தியுற்று தன் கலாவன்மையை வெளியிடுகிறான். ஆதரவு குறைந்தபோது கலைஞனும் குன்றிப்போகிறான்.

கலைஞனை ஊக்குவித்து அவனிடமுள்ள கலைத்திறன் முழுவதையும் கறந்தெடுப்பது பொதுமக்களையும் அரசாங்கத்தையும் பொறுத்தது. அவர்கள் அக்கறை காட்டவில்லையென்றால் கலைஞன் ஒடிந்துபோவான். அவனுடன் கலையும் மடிந்துபோகும். 'கலைஞன் எப்பொழுதும் தரித்திரனாயே இருப்பான். சரஸ்வதி இருக்குமிடத்தில் லக்ஷ்மி இருக்கமாட்டாள்' என்றெல்லாம் கூறுவது வரண்டபேச்சு. பெரும்பாலான கலைஞர்கள் சதா வறுமைக்கடலில் மூழ்கிக் கிடப்பது என்னவோ உண்மைதான். ஆனால் இதற்கு வேறு காரணங்கள் உண்டு. ஒன்று கலைஞன் ஒரு சுதந்திர புருஷன். அவன் இயற்கையாகவே எவருக்கும் இலேசில் தலைபணிய விரும்ப மாட்டான்.

மற்றவர்கள் தாமாகவே தன்னிடம் வந்து தன்னைப் போற்றிப் புகழவேண்டும் என்ற இறுமாப்புக் கொண்டவன். ஒருவரிடம் சென்று இரப்பது அவனுக்குக் கசக்கும். தனது கலைச்செல்வத்தின் முன் வெறும் பணச்செல்வம் தூசு என்று மதிப்பவன். உண்மைக் கலைஞனிடத்தில் காணப்படும் இந்தக்குணம் நல்லதோ, கூடாதோ, மடமையானதோ, புத்தியானதோ என்று நாம் கண்டுபிடிக்கத்தேவையில்லை. அந்தக் குணம் அவனிடம் இருக்கிறது. அவ்வளவுதான்.

## கலை-அரங்கம்

இது காரணமாக, பெரும்பாலான கலைஞர்கள் பணம் படைத்த 'பெரியவர்' களின் தயவைப் பெறும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டு வாழ்நாள் முழுவதும் தரித்திரத்தில் தவழ்கிறார்கள்.

இன்னுமொரு காரணத்தையும் கூறலாம். கலைஞர்கள் இயல்பாகவே நுண்ணிய உள்ளம் படைத்தவர்கள். ஐம்புலன்களுக்கு இலகுவில் அடிமைப்பட்டு விடுவார்கள். இன்ப நுகர்ச்சியில் அவர்களுக்கு ஈடுபாடு அதிகம். இதன்பலனாக அவர்கள் பொருளைத் துச்சமாக மதித்து, கிடைக்கும் பொருளில் ஒரு சிறிதளவாவது சேமித்துவைக்காமல், பெரும்பகுதியை லௌகீகமான விஷயங்களில் செலவழித்து விடுகிறார்கள். இன்னுமொன்று, ஒரு கலைஞனின் உச்சதசை, அவன் புகழோடும், பணத்தோடும் வாழும்காலம் நீடித்ததல்ல. பொதுப்படக் கூறின் அது ஒரு பத்து, பதினைந்து ஆண்டுகளேதான். இந்தச்சொற்ப காலத்துக்குள் தான் அவனுடைய ஆட்டம் எல்லாம். அதற்குப்பின் அவனுக்குச் சனியன் பிடித்து விடுகிறது. பேரும் புகழும் மங்கிவிடுகிறது. அவன் சாதாரண மனிதனிலும் கேவலமான பிராணியாய் விடுகிறான். சிறப்புடன் வாழ்ந்தசொற்ப காலத்தில் பொருளை மிச்சம் பிடிக்கவேண்டுமென்றநோக்கத்துக்கு அவனுடைய சிங்கார சீவியம் முற்றுப்புள்ளி வைத்துவிடும்.

ஒரு காலத்தில் ஜனங்கள் நெருக்கியடித்துக் கொண்டு பார்க்கவேண்டுமென்றே கேட்கவேண்டுமென்றே ஆவலுடன் சென்ற எத்தனை பாடகர், எத்தனை வாத்தியக்காரர், எத்தனை நடிகர், எத்தனை நடிகையர் இன்று தெருத்தெருவாக அலைகிறார்கள்? அன்று 'ராஜாவோ, ராஜாத்தியோ' என்று கொண்டாடிய பொதுமக்களும் அரசாங்கமும் இன்று இந்த மாஜி கலைஞர்களுக்காக என்னசெய்கின்றனர்? வழியில் தற்செயலாக சந்திக்க நேர்ந்தால் மறுபக்கம் திரும்பிக் கொண்டல்லவா போய்விடுகிறார்கள்!

(தொடரும்)

# 'கதாப்பிரசங்கம்' – கணேசு

ஆகாசவாணியில் சில மாதங்களுக்கு முன்பு தொடர்ந்து சில வாரங்களாக கந்தபுராண உபந்நியாசம் நிகழ்த்திவந்த கிருபானந்தவாரியார் இப்பொழுது ஞாயிறுதோறும் கம்ப இராமாயண உபந்நியாசம் நிகழ்த்திவருகிறர். அவரது இரண்டு உபந்நியாசங்களை வானொலியில் கேட்ட ஓர் அன்பர் ''இத்தனை வயசாகியும் பேச்சில் என்ன கம்பீரம், குரல் தான் எப்படிக் கணீரென்றிருக்கிறது'' என அதிசயப்பட்டார். கிருபானந்தவாரியாரின் கதாப்பிரசங்கத்தை யாழ்ப்பாணத்தவரும் நேரில் கேட்கும் வாய்ப்பு சில ஆண்டுகளுக்கு முன்கிடைத்தது. அவர்கள் கேட்டது கதாப்பிரசங்கம், சங்கீதகதாப்பிரசங்கம். இப்பொழுது வானொலியில் வாரியார் வாரி வழங்குவதோ இலக்கிய உபந்நியாசம். ஆமாம், தரம் உயர்ந்துதானிருக்கிறது. வேண்டுமானல் ஒரு ஞாயிறு இரவு கேட்டுப்பாருங்கள்.

கதையை விந்நியாசமாக எடுத்துச்சொல்வது கதாப்பிரசங்கம். கேட்பவர்களுக்கு அலுப்புத் தட்டாதபடி முன்னுளில் கதாப்பிரசங்கம் செய்பவர்கள்தங்கள் பிரசங்கத்தின் நடுவே அடிக்கடி 'நம்பார்பதிபதேய' சொல்லி அரைத் தூக்கத்திலும் முழுத்தூக்கத்திலுமிருப்பவர்களை உஷார்படுத்திவிடுவார்கள். கதைக்குள் கதையாக வேடிக்கையும் விகடமுமாக எவ்வளவோ கதைகள் சொல்லுவார்கள். இராகமிழுத்துப் பாட்டுப் பாடுவார்கள். இடையிடையே ஆடியும் பிடித்தும் ஊட்டுவார்கள். சங்கரசுப்பையர் போன்ற சிரேஷ்டர்களின்கதாப்பிரசங்கம் பக்தி பரிமளிப்பாகஉயர்தோரணையில் அமைந்திருக்கும். கவர்ச்சிக்காக தேவையற்ற அலங்காரங்களைத் தங்கள் பிரசங்கத்தில் நுழைத்துவிடமாட்டார்கள்.

இன்றைக்கு, கதாப்பிரசங்கத்தில் புதியவிறு விறுப்பு ஏற்பட்டிருக்கிறது. எங்கும், எல்லாத்துறைகளிலும் கலைகளிலும் ஏற்பட்டிருக்கும் வேக விறுவிறுப்புத்தான். அல்லாதுபோனல் அந்நாளில் நாலு மணி நேரத்துக்கும் மேல் எடுக்கும் கதாப்பிரசங்கத்தை ஒருமணி நேரத்துக்குள்ளும் முக்கால் மணி நேரத்துக்குள்ளும் கச்சிதமாக நிகழ்த்தி முடித்துவிடுவது எப்படிச் சாத்தியமாகும்?

யாழ்ப்பாணம் முத்தமிழ் மணி ஸ்ரீ ஸி. எஸ். எஸ். மணிபாகவதர் இந்தப் பழமைக்கும் புதுமைக்கும் பொதுவான தொரு நடு வழியை கதாப்பிரசங்கத் துறையில் தமக்குள்ளநீண்ட கால அனுபவத்தின் பலனுக வெற்றிகரமாகச் சாதித்திருக்கிறர். அவரது வழியைப் பின்பற்றும் ஒரு பரம்பரையைத் தோற்றுவிக்குமளவில் ஸ்ரீ மணி பாகவதருக்கு தனித்துவமான ஒரு கலை அம்சம் கைவந்திருக்கிறது என்றே சொல்லலாம்.

மைக்கில்லாமலே ஆயிரம் பேருக்கு வகைசொல்லும் சாரீர சம்பத்துடன் யாழ் தேவி எக்ஸ்பிரஸ் வேகத்தில் சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் பல கோவில்களிலும் கதை நிகழ்த்திவரும் எஸ். கணேசசுந்தரன், மணிபாகவதரின் பரம்பரையில் முன்னணியில் நிற்கிறர்.

வெண்கல நாதம்தொனிக்கும் கனத்த சாரீரம்; அலாரம் மணி அடிப்பதுபோல் கணகணவென்று அரைமணி நேரத்துக்குள் கதையைக்கூறி முடித்துவிடுவார். சபையில்பெரு மழை பெய்து ஓய்ந்தாற் போலிருக்கும். வண்ணார் பண்ணை கில்னர் லேனில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் கோவிலில் இவரது மணிவேக கதாப்பிரசங்கம் பத்துநாட்களும் மணி மணியாக நடைபெற்றது. பத்தாவதுநாள், கோவிலில் ஸ்ரீ கணேசசுந்தரத்துக்குப் பொன்னுடை போர்த்தி தங்கப்பதக்கம் வழங்கி பல்லாண்டுகூறி ஆசீர்வதித்தார்கள் பெரியோர்கள்.

—''கீதா''

# "விவாகம் ஒரு பொன் விலங்கு"

திருமணம் செய்வதால் வாழ்க்கை இன்பம்பெருகுவதாக எல்லோரும் எண்ணவில்லை. ஜெர்மனியில் நூறு பேருக்கு 46 விகிதமான பெண்கள் ''மணம் புரிவதால் மகிழ்ச்சி உண்டாவதில்லை'' என்றார்கள். 40விகிதம் பெண்கள் மட்டுமே மணவாழ்க்கையுடன்இணைந்ததுதான் மகிழ்ச்சியெனக் கருதுகிறார்கள். 14 வீதப் பெண்கள் இன்னும் எந்த வித முடிவுக்கும் வராதநிலையிலிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மன் ஆண்களில் 55 வீதம் பேர் உண்மையான உல்லாச வாழ்க்கைக்கு மனைவிதேவை எனக்கருதி வந்தார்கள். ஆனல் இன்று 49 வீத ஆண்கள் மட்டுமே திருமண வாழ்க்கை பெருமைக்குரியது எனக் கருதுகிறார்கள்.

மண வாழ்க்கை குறித்து ஆண்களும் பெண்களும் என்ன நினைக்கிறார்கள்? மகிழ்ச்சியாக வாழ்வதற்கு திருமணம் தேவையா? இது பற்றி இளைஞர்களும் ''இளம் பெண்களும் கருதுவது என்ன என்பதை அறிவதற்காகஅண்மையில் மேற்கு ஜெர்மனியில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களிலிருந்து பல சுவையான தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

15 ஆண்டுகளுக்கு முன்பு ஆண்களில் 55வீதம் பேர் ''மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு மனைவி தேவை''



யாழ்ப்பாணம் கன்னியர் மட முன்றலில் நகரமேயர் திரு எஸ். மகாதேவா தலைமையில்நடைபெற்ற 'யாருக்குச்சொந்தம்?' என்ற நாடகத்தில்நடித்த குமாரி கமலாவின் ஒரு தோற்றத்தைப்படத்தில் காணலாம்.

யாழ். திறந்தவெளி அரங்கிலும் இந்நாடகம் விரைவில் மேடையேற்றப்படவிருக்கிறது.

என்று கூறினர்கள். ஆனல் இன்று 49 வீதம் பேர்மட்டுமே ''திருமணம் அவசியம்'' என்கிறார்கள்.

பெண்களின் மனப்போக்கிலும் பெரும் மாறுதல்களைக் காணமுடிகிறது. திருமண வயது வந்த இளம் பெண்களில்நூறுபேருக்கு 46 பேர், ''மகிழ்சியான வாழ்க்கைக்குத்திருமணம் மட்டும் தான் காரணம் என்று கூற முடியாது'' என்று சொல்கிறார்கள். 40 விகித பெண்கள் மட்டுமே, ''ஆனந்த வாழ்வுக்கு கல்யாணம் அவசியம்'' எனக்கருதுகிறார்கள். 14 வீதம் பேர் இன்னும் ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையில் இருக்கிறார்கள். தகுந்த ''ஆள்'' கிடைக்கும் வரை தாங்கள் காத்திருக்கப் போவதாகவும், அதன் பின்னரே திருமணத்தின் அவசியம் குறித்துக் கருத்துக்கூற இயலும் என்றும் இவர்கள் கூறினர்கள்.

''மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு திருமணம் தேவையில்லை'' என்று கூறும் ஆண்கள் நடைமுறையில் மணம் புரியாமல் இருப்பதில்லை. ஏனெனில், ஆண்களில் 63 வீதம் பேர் திருமணமானவர்கள். 25 சதவிகிதத்திற்கும் குறைவானவர்கள் திருமணம் ஆகாமலிருக்கிறார்கள். அத்துடன் இளம் வயதிலேயே திருமணம் புரிவோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துவருகிறது. 1910-ம் ஆண்டில் 100-க்கு 13ஆண்கள் வாழ்க்கையின் இறுதிவரை மணமாகாமலே இருந்தார்கள். ஆனல், இன்று இவர்களின் எண்ணிக்கை 31 ஆகக் குறைந்துவிட்டது. குடும்பத்தளைகளிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாகத்திரியவேண்டுமென்ற காரணத்திற்காகவே பெரும்பாலான பிரமச்சாரிகள் திருமணமின்றி இருக்கிறார்கள்.

### தனிமை ஏன்?

மேற்கு ஜெர்மனியில் இப்பொழுது 30 லட்சம் ஆண்கள் திருமணமாகாமல் இருக்கிறார்கள். அண்மையில் நடந்த ''உலகப்பிரமச்சாரிகள் மாநாட்டில்'' ஏராளமானவர்கள் கலந்துகொண்டார்கள். ''பிரமச்சாரிகள் சுதந்திரமாக வாழ விரும்புகிறார்கள். பணச் செலவை இருமடங்காக்க அவர்கள் விரும்பவில்லை. எனவேதான் அவர்கள் தனிவாழ்க்கை நடத்துகிறார்கள்'' என்று இம்மகாநாட்டில் கூறியவர்கள் பேசியவர்களில் சிலர் கூறினர்கள். ஆனல் குடும்பப்பொறுப்பு ஏற்கப்படுபவர்களும், தாழ்வு மனப்பான்மை உள்ளவர்களும் உழைக்காமல் உல்லாசமாக ஊர்சுற்றுபவர்களும், காதலில்தோல்வி அடைந்தவர்களும் தான் பெரும்பாலும் திருமணமின்றி வாழ்கிறார்கள் என்று புள்ளிவிவர நிபுணர்கள் கூறுகிறார்கள்.

மேற்கு ஜெர்மனியில் 90 லட்சம் பெண்கள் கணவரின்றி வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலோரின் கணவர்கள் இரண்டாம் உலகப்போரின்போது மாண்டுவிட்டதால்இவர்கள் தனிமையானர்கள். திருமணமாகாத ஆண்களைவிட திருமணமாகாத பெண்களின் வாழ்க்கை அதிக சங்கடமாகஇருக்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தி, உத்தியோகத்துறையில் சுபீட்சம் நிலவுதல், சகாயமான வழியில் மாற்றங்கள் ஏற்படல், கமத்தொழில் மத்திம பலிதம், பெண்களுக்குப் பலவழிகளிலும் சிறப்புமிகுதல், நீண்ட பிரயாணம் காணல், உத்தியோகத்தி லுள்ளவர்களுக்கு நன்மைஉண்டாம். ஜூன் 2, 3-ம் தினங்கள்விசேடமுடைத்து.

**கன்னி இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் கஷ்டங்கள் அதிகமுள. பலவழிகளாலும் துன்பங்களுக்கு இடமுண்டு. சச்சரவுகள், எதிரிகள் தோன்றல், தேகநலக்குறைவு காணல், முயற்சிகளில்தடைகள் ஏற்படல், காயங்கள் ஏற்படல், கஷ்டமான பிரயாணங்கள், நட்டங்கள், அவமரியாதை ஏற்படல் ஆதியனவுக்கு இடமுண்டு. கமத்தொழிலில் நட்டமுண்டு. உத்தியோகத்துறையில் மத்திமமான பலன்கள் நடக்கும். வர்த்தகத்துறையில் அதிகரித்த இலாபமும் தொழில் விருத்தியுமுண்டு. பெண்களுக்கு எல்லாப் பிரச்னைகளுக்கும் அபிவிருத்தியான முறையில் தீர்வுகள் காண இடமுண்டு. மதிப்புயர்ச்சியுமுண்டு. ஜூன் 2, 3-ந் தேதிகள் சுபதினங்களாகும்.

**துலா இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சுபபலன்களும் நடக்க இடமுண்டாயினும் கஷ்ட பலன்களே பெரும்பகுதி நடக்கும். முயற்சிகளில் வெற்றி, பொருள் வரவு, தேகாரோக்கியம் போன்றவை காணப்படினும்பல்வேறுபட்டதொழில்களில் ஈடுபாடு, பொருள் நட்டம், சச்சரவுகள், அபகீர்த்தி, விபத்துக்கள், கஷ்ட பிரயாணங்கள், அளவுக்கதிகமான செலவுகள், எதிரிகள்தோன்றல் ஆதியனவுக்கே அதிகம் இடமுண்டு. கமத்தொழில் இவ்வாரத்தில் அதிகபலன் தரஇடமில்லை. உத்தியோகத்துறையில் மேலதிகாரிகளது வெறுப்பு ஏற்பட இடமுண்டு. வர்த்தகத்துறையில் அபிவிருத்தியுண்டு. பெண்களுக்கு குடும்பத்திலும், சமூகத்திலும் மதிப்பு இருப்பினும் இவ்வாரத்தில் மாதாந்த விலக்கு காரணமாக ரோகமேற்படஇடமுண்டு. தேகநலத்தைப் பேணுக. மே 30, ஜூன் 2, 3 சுபதினங்களாகும்.

**விருச்சிக இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சுபபலன்கள் மிகுந்து நடக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் சமாதானமும் நிலவும். செய்தொழில்களால் இலாபமும் குடும்பத்தில் சுபகருமங்கள் நடத்தலும் குழந்தைப் பிறப்பு விவாகாதிகருமம் நடத்தல் முதலியனவும் நடக்கஇடமுண்டு. கல்வித்துறையினருக்கு வெகு சிறப்புக்காணப்படும். உத்தியோகத்துறையினருக்கு பணவருவாய் சராசரியாகவும் தொழில் முறையில் மத்திம பலன் தருவதாகவும் காணப்படுகின்றது. கமத்தொழில் பலன் தரமாட்டாது. பெண்களுக்கு இவ்வாரம் கஷ்ட பலன்களைத்தரும். ஆண்கள் தொடர்புகளை விலக்குக. காதல் விவகாரங்களை நீக்குக. ஜூன் 2, 3-ம் நாட்கள் சுபகாலமாகும்.

**தனு இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் திட்டமாக இன்னபலன் நடக்குமென்று கூறுவது முடியாது. தீய பலன்களும் நடக்கஇடமுண்டு — சுபபலன்களும் நடக்க இடமுண்டு. அதிக செல்வாக்கு, சந்தோஷம், இலாபம் கூடுதலாக வருதல், தேகநலம் ஆதியனவும் கஷ்டபிரயாணம், முயற்சிகளில் முறிவு, தடைகள் ஏற்படல், அபிப்பிராய பேதம் ஆதியனவும் நடக்கலாம். கமத்தொழில், கல்வித்துறை, உத்தியோகத்துறை பலன்கள் மிச்சிரமாக நடக்கும். வர்த்தகத்துறையில் அபிவிருத்திக்கு முதலீடு செய்ய வேண்டாம். நடக்கும் தொழிலை அப்படியே நடத்திவருதல் நன்று. பெண்களுக்கு இந்தவாரம் நல்லபலன்கள் நடக்கவும் குடும்பத்தில் அமைதி நிலவவும் இடமுண்டு. ஜூன் 2, 3-ந் தேதிகள் சுபகாலமாகும்.

**மகர இராசி**

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் அசுபபலன்கள் மிகவும் கூடுதலாக காணப்படுகின்றன. பணமுடை, செய்தொழில் நட்டம், தேகநலக்குறைவு, இனபந்துக்களிடை மரணம், அளவுக்கதிகமான செலவுகள், சச்சரவுகள், குடும்பத்தில் மனக்கிலேசம், கஷ்டபிரயாணங்கள், விபத்துக்கள் ஆதியனவுக்கெல்லாம் இடமுண்டு. அமைதியாக இருப்பது நலம், கமத்தொழில், வர்த்தகம் ஆதியனவற்றில் முதலீடுவேண்டாம். உத்தியோகத்துறையினருக்கு சுமாரான பலன்கள் நடக்க இடமுண்டு, பெண்களுக்கு சமூகசேவை முதலியவற்றில் ஈடுபாடிருப்பதும் பொதுவாக அமைதியும் அடக்கமும் அவசியமாகும். ஜூன் 3-ந்தேதி விசேடமாகும்.

**கும்பராசி**

இவ்விராசியாளருக்கு அசுபபலன்களின் அதிகாரம் இவ்வாரம் மிக அதிகமாக இருப்பதால் நிதானம், பொறுமை, அடக்கம் அவசியம். செலவுகள் அதிகமாகவும் அனுவசியமாகவும் காணப்படும். பதவியில்- அந்தஸ்தில் வீழ்ச்சியும் காணப்படுகின்றது. எதிரிகளால் கஷ்டமுண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபாடு வேண்டாம். விபத்துக்கள், தேகநலக்கேடு அதிகமாக காணப்படுகிறது. கமத்தொழிலில் புதிதாக முயற்சி வேண்டாம். உத்தியோகத்துறையினருக்கும் கஷ்டமுண்டு. மேலதிகாரிகளால் இடர் விளையும். வர்த்தகத் துறையில் பணமுடக்கம் வேண்டாம். பெண்களுக்கு விவாக சுபகருமங்கள் நடத்தல், சந்தோஷம், பணவரவு, சிலருக்கு பெண் குழந்தைப்பேறு கிட்டல் ஆதியன. ஜூன் 2, 3-ந்தேதிகள் சுபகாலமாகும்.

**மீனராசி**


இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் நடக்கும் பலன்கள் கலப்பாக இருப்பினும் ஓரளவு சமாளித்து நடக்க இடமுண்டு. பணவரவுண்டு- அதற்கேற்ப செலவும் உண்டு. நல்லநண்பர்கள் சேர்க்கையுண்டு- அதே வேளையில் நண்பரே எதிரிகளாக மாறவும் செய்வர். குடும்பத்தில் அமைதியுண்டாயினும் இனபந்துக்களிடை சச்சரவு காணப்படும். தேகநலமிருக்கும். குடும்பத்தில் வைத்தியச் [illegible]. வர்த்தகம் சுமாராக பலன் தரும். உத்தியோகத்துறையினருக்கு மேலதிகாரிகள் உதவி, தொழிலிடத்தில் ஊழியரால் உதவியுண்டு. பெண்களுக்கு குடும்ப சுகம், மாதாவழிஉதவி, பணவரவு. ஆதியன காணப்படும். ஜூன் 2, 3-ந்தேதிகள் நலமுள்ள தினங்களாகும்.

REGAL - JAF.
NOW SHOWING
TABHUNTER
in
THE GOLDEN
ARROW
(Technirama - Technicolor)

வெற்றிகரமான 2வது வாரம்.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்) டிவோலி (நுவரெலியா)
லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடேர்ன் (பதுளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30 6-30 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

# கட்ச் நிலைமை பற்றி இந்திய மந்திரிகள் ஆலோசனை

புதுடில்லி, மே 29

கட்ச்-ரன் பகுதிசம்பந்தமாக பிரிட்டிஷ் பிரதமரின் கடைசியோசனை பற்றி நேற்றுக்காலை திரு. சாஸ்திரி தனது மந்திரிசபை சகாக்களுடன் ஆலோசித்தார். நேற்றுமாலை மேலும் விளக்கமாக இந்தயோசனை பற்றி அவர் விவாதித்தார்.

இந்தியாவின் நிலையில் எவ்வித மாற்றமும் கிடையாது என்றும், ஆக்கிரமிப்பு காலி செய்யப்பட்ட பின்பே பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டது.

வாஷிங்டனில் ராஜாங்க இலாகா விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்தியாவும், பாகிஸ்தானும் அமெரிக்க ஆயுதங்களை உபயோகிப்பதாக பரஸ்பரம் கூறியுள்ள புகார்பற்றி எவ்வித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், இருநாடுகளுக்கும் தொடர்ந்து ஆயுத சப்ளை நீடித்து வருகிறதென்றும் கூறியுள்ளது.

## சாஸ்திரி வெளிநாடு பயணம்

புதுடில்லி, மே 29

இந்தியப் பிரதமர் சாஸ்திரி கனடாவுக்குச் செல்லும் வழியில் கெய்ரோவில் ஒரு தினம் தங்குவார் என்று அறிவிக்கப்பட்டது.

கனடாவில் 5 தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்த பின், லண்டனுக்குச்சென்று காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் அவர் கலந்து கொள்வார்.

பின் அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டுக்குச் செல்வார்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தழைத்தோங்க, இறையுணர்ச்சி எங்கும் பரவ சைவமக்கள் பல முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். திருவாவடுதுறை ஆதீனம்போன்ற சைவநிறுவனங்கள் நிறுவப்படவேண்டும். பாடல்பெற்ற ஆலயங்களைப் புதுப்பிப்பதோடு மட்டும் அமையாது, அந்நியர் ஆட்சிக்குமுன் அமைந்திருந்த நிலையில் அமைக்கச் சிவநெறிச்செல்வர்கள் முன்வரவேண்டும். கோபுரங்கள் அமைப்பதோடு சிற்பசித்திரங்களை இடம்பெறச்செய்து திருமுறைகளைச் சுவர்களில் தீட்டுதல்வேண்டும். புத்தமதம் ஆட்சியாளர்களின் அனுசரணையால்மறுமலர்ச்சியுற்று வரும் இவ்வேளையில் சைவசமயத்தை வளம் பெறச்செய்தல்சைவநன்மக்களின் கடமையாகும். மூவரின்தித்திக்கும்தேவாரங்கள் சைவசமயத்திற்குமட்டுமன்றிச் செந்தமிழ் இலக்கியங்களுக்கும் புதியதோர் திருப்பத்தை உண்டாக்கியிருக்கின்றன. தமிழ்நாட்டு வரலாற்றில் சமய குரவர்களின் வரலாறு தனியிடத்தைப் பெற்றிருக்கிறது.

## திருவிழா

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் 7-ம் திருவிழா பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இரவு விசேஷ மேளக்கச்சேரிகளும் மகாராஜபுரம் வி. சந்தானத்தின் சங்கீதக்கச்சேரியும் இடம்பெறும்.

## மட்டக்களப்பில் சைவப்புலவர் மகாநாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

அடுத்தமாதம் 5-ம், 6-ம் திகதிகளில் மட்டக்களப்பில், அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்க மகாநாடு நடைபெறவிருக்கிறது.

சைவப்புலவர் தேர்வில் வெற்றிபெற்ற 13 மாணவர்களுக்குப் பட்டம் வழங்கப்படும். இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளிலுமிருந்து தோற்றிய மாணவர்களுள் முதல்வராகச் சித்தியடைந்த அளவெட்டி கு. மனோன்மணிக்கு சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம் அளிக்கும் 150ரூபா பெறுமதியான தங்கப்பதக்கம் பரிசளிக்கப்படும்.

மட்டக்களப்புச் சைவப் பெரியார் தேசிகமணிக்கு சித்தாந்த சிரோன் மணி என்னும் கௌரவப் பட்டம் சங்கத்தாரால் அளிக்கப்படவிருக்கிறது. இம்மகாநாடு மட்டக்களப்பில் முதன் முறையாக நடைபெறுகிறது.

**தேவை**

குமாஸ்தாக்கள், வான் சேல்ஸ்மன்கள், சைக்கிள் விற்பனையாளர்கள் தேவை. 31-5-65 காலை 10-30-ல் இருந்த பிற்பகல் 2 மணி வரை நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். தி நாஷனல் சேல்ஸ் கோப்பரேசன், 1/1 மின்சார நிலைய வீதி, கனிபா கட்டிடம், யாழ்ப்பாணம். 344

**விற்பனைக்கு**

மிகவும் சிறந்த நிலையில் உள்ள, கறுத்த நிற ஒஸ்ரின் சோமசெர் விற்பனைக்கு உண்டு. கம்பனியால் பாவிக்கப்பட்டது. கூடிய விலைக்கு கொடுக்கப்படும். வாடிவீடு, சாவகச்சேரி. 341

**திருமண அழைப்பு**

**பத்மநாதன் — விமலேஸ்வரி**

எங்கள் புத்திரி விமலேஸ்வரிக்கும், திரு. நா. கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உதவியாளர், 15/1 செட்டித் தெரு, நல்லூர் யாழ்ப்பாணம்) அவர்களதும் அவர்கள் பாரியாரினதும் புத்திரன் டாக்டர் பத்மநாதன், (அரசாங்க வைத்தியசாலை, நுவரெலியா), அவர்களுக்கும் விசுவாவசு வருடம் வைகாசித் திங்கள் 18-ம் நாள் (31-5-65) எமது இல்லத்தில் திருமணம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. உற்றாரும் உறவினரும் சமுகந்தந்து திருமண வைபவத்தைச் சிறப்பித்து ஆசி கூறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்களன்புள்ள
த. சிவலிங்கமும்
(ஓய்வுபெற்ற சுங்கத்துறை விலை மதிப்பீட்டாளர்)
பாரியாரும்
விமலஸ்தான், மயிலணி வீதி, சுன்னாகம்
188

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org